11 Copies

ஸ்ரீ

பேரருளாளன் பெருந்தேவித் தாயார் திருவடிகளே சரணம்.
ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ காஞ்சி பிரதிவாதி பயங்கரம்
அண்ணங்கராசாரியர் எழுதிய

பூர்வாசார்ய ப்ரபாவம்

இரண்டாவது மலர்.

பட்டர், நஞ்சீயர் நம்பிள்ளை, வடக்குத் திருவீதிப் பிள்ளை, பெரிய வாச்சான்பிள்ளை, பிள்ளை லோகாசாரியர், வேதாந்த தேசிகன் ஆகிய எழுவர் வைபவம்.


பக்தன் வெளியீடு

அச்சிட்டது: M. W. N. பிரஸ், சென்னை-5.

கிடைக்குமிடம்:

P. B. ANNANGARACHARYA
L. KANCHEEPURAM.

விலை 60 NP.]
1963



சின்னகாஞ்சீபுரம் நம்பிள்ளை ஸந்நிதியில் எழுந்தருளியிருக்கும் நம்பிள்ளை (முலவர் உத்ஸவர்), அவர் சிஷ்யர்கள் வடக்குத் திருவீதிப்பிள்ளை, பெரிய வாச்சான் பிள்ளை.

ஸ்ரீ:

பட்டர், நஞ்சீயர் வைபவச் சுருக்கம்.

(P. B. அண்ணங்கராசாரியர்.)

நமது ஸம்ப்ரதாயத்தில் எம்பெருமானாருடைய பதவியிலே அபிஷிக்தராய் அவரினும் விஞ்சிய ஞான வைபவத்தையுடையரான பட்டர் என்னும் ஆசிரியருடைய வைபவக் கடலில் சில சிறு திவலைகளை ஈண்டு அனுபவிக்க விழிகின்றோம்.

இவ்வாசிரியர் கூரத்தாழ்வானுடைய திருக்குமாரர் என்றும் ஸ்ரீரங்கநாதனுடைய திருக்குமாரர் என்றும் வழங்கப்படுவர். ஆழ்வான் க்ருஹஸ்தாச்ரமத்திலெழுந்தருளியிருக்கச் செய்தேயும் "விஹித விஷய நிவ்ருத்தி தன்னேற்றம்" என்று ஸ்ரீவசந பூஷணத்திலருளிச் செய்த கணக்கிலே விரக்தாக்ரேஸரராக எழுந்தருளியிருந்தனர். இவர் தமது செல்வத்தை முற்றும் துறந்து எம்பெருமானார் திருவடிகளில் ஆச்ரயித்தது முதல் நாடோறும் உபாதாந காலத்திலே ஸ்ரீரங்கத்தில் சில திருமாளிகைகளில் உஞ்சவ்ருத்தி செய்து, அது கொண்டு குடும்ப காரியத்தை நிர்வஹித்துக்கொண்டு ஒவ்வொரு நாளும் கிடைக்கிற உணவுப் பொருள்களில் மறுநாளைக்கென்று சிறிதும் சேஷப்படுத்தி வைத்துக் கொள்ளாமல் அன்றன்றைக்கே தேஹ யாத்திரை நடத்தியருளுகையில் ஒரு நாள் விடாப் பெருமழை பொழிந்ததனால் வெளியே போய் உபாதானம் செய்து வரக்கூடாமல் போக, அதனால் அன்றைக்கு வெறும் தீர்த்தத்தையே உட்கொண்டு அருளிச்செயலநுஸந்தாநமே தாரகமாகக்கொண்டு வேறு உணவின்றியே யிருந்திட, அன்றிரவு பெரிய பெருமாள் அமுதுசெய்தருளுகிறபோது உண்டான திருச்சின்ன வொலி கேட்ட வளவில் இவரது தேவியாரான ஆண்டாள் பெருமாளைக் குறித்து, 'உம்முடைய அடியவர் பட்டினியிருக்க நீர் குலாவிக் குலாவி அமுது செய்தருளுகிறீரோ?' என்று நினைப்பிட்ட வளவிலே ஸர்வஜ்ஞனான ஸ்ரீரங்கநாதன் அந்த ஆண்டாள் நினைப்பைத் திருவுள்ளம்பற்றி உடனே தேவஸ்தாந கார்ய நிர்வாஹகரான உத்தம நம்பிக்கு அர்ச்சக முகேந கட்டளையிட்டு அப்பொழுது தாம் அமுது செய்த அக்காரவடிசிலை ஸகல பரிஜந பரிவாரங்களுடன் அவரைக் கொண்டு ஆழ்வான் திருமாளிகைக்கு அனுப்பி

யருள, ஆழ்வானும் இதனையறிந்து பதறி யெழுந்து எதிர்கொண்டு மஹாப்ரஸாதமென்று அதில் தமக்கும் தமது தேவிக்குமாக இரண்டு திரளைகளை யெடுத்துக் கொண்டு உத்தம நம்பியை அனுப்பிவிட்டு பக்தவத்ஸலனை பகவானுடைய வரம்புகடந்த கருணைத் திறத்தை வியந்து அந்த அடிசிலில் ஒரு பகுதியைத் தாம் அமுதுசெய்து மற்றதைத் தேவியாருக்குக் கொடுத்தருள, முன்பு தசரத சக்ரவர்த்திக்குப் புத்ர காமேஷ்டியிற் கிடைத்த பாயஸத்தின் கூறுகளே ஸ்ரீராம லக்ஷ்மண பரத சத்ருக்நர்களின் திருவவதாரத்துக்குக் காரணமானதுபோல இப்பொழுது இவர்க்கும் இத்திரளைகளிரண்டுமே இரண்டு திருக்குமாரர்கள் திருவவதரிப்பதற்கு ஹேதுவாயின. முறையே இவர்களின் திருநாமம் ஸ்ரீ பராசரபட்டர், ஸ்ரீ வேதவ்யாஸபட்டர் என்பனவாம்.

பராசர பட்டர் என்று திருநாமமாயினும் நமது ஸம்ப்ரதாய க்ரந்தங்களிலெங்கும் பட்டர் என்றே இவ்வாசிரியர் வழங்கப்படுவர். பட்டர் என்னும் வடசொல் வேதசாஸ்திரங்களை நன்கு கற்றுணர்ந்த வித்வானையும் ஸ்தோத்ரஞ் செய்யும் தொழிலுடையவனையும் சொல்லும், [“பட்டாரக”] என்னும் சொல்லும் இத்திறத்ததே. ‘விளையும் பயிர் முளையிலே’ என்னுமாபோலே சிசுவாயிருந்த தன்மையிலேயே இவருடைய திறமையை நன்குணர்ந்த எம்பெருமானார் இவர்க்குப் பொருத்தமாக பட்டர் என்று திருநாமஞ் சாத்தினதும், அத்திருநாமத்திற்கு மிகப்பொருத்தமாகவே இவரும் ஸர்வஜ்ஞராய் விளங்கிப் புகழ் பெற்றதும் எம்பெருமானுடைய ஸத்ய ஸங்கல்பத்வத்தை ஸத்யமாக்கின போலும்.

இங்ஙனமே நாம கரணம் செய்தருள்வதற்காக உடையவர் எம்பாருடன் ஆழ்வான் திருமாளிகைக் கெழுந்தருளிக் குழந்தைகளை எடுத்துக் கொண்டு வாரும் என்று எம்பார்க்கு நியமிக்க அவர் அங்ஙனமே ப்ரபந்நகுலக் கொழுந்தான அக்குழந்தைகளை எடுத்துக் கொண்டு வரும்போது த்ருஷ்டி தோஷாதிகள் தங்காதபடி ரக்ஷையாக த்வயமென்னும் மந்த்ர ரத்நத்தை அநுஸந்தித்து வாழ்த்திக் கொண்டே வந்து குழந்தைகளை எம்பெருமானார்க்குக் காட்டினர்; அவர் மிக்க களிப்

புடனே ஆனந்தக் கண்ணீர் துளிக்கத் தம் திருக்கண்
களாற் குளிரக் கடாக்ஷிக்கும்போது அத் தெய்விக
சிசுக்களின் தேஜோ விசேஷத்தைக் கண்டு வியப்புக்
கொண்டு 'எம்பாரே! இக்குழந்தைகளிடம் த்வயம் பரி
மளிக்கின்றதே. இங்ஙனம் ஆகுமாறு என் செய்தீர்?'
என்று வினவ, எம்பார் 'குழந்தைகட்குக் காப்பாக
த்வயா நுஸந்தானம் செய்து கொண்டு வந்தேன்'
என்ன; உடையவர் அப்படி எம்பார் காப்பிட்டதற்கு
உகந்து அவரைப் பார்த்து 'இக்குழந்தைகள் உய்யும்
வகையை நாடிச் செய்தற்கு நீர் முற்பட்டீராதலால் இவர்
கட்கு நீரே ஆசார்யராகக் கடவீர்'' என்று நியமித்தரு
ளினரென்றும், அப்படியே அத்திருக் குமாரர்கட்கு
எம்பாரே ஆசார்ய க்ருத்யங்கள் செய்தருளினரென்
றும், இது பற்றியே, எம்பெருமானார் எம்பார் பட்டர்
நஞ்சீயர் என்றிப்படி ஆசார்ய பரம்பரை வருகிறதென்
றும் ப்ரஸித்தமாயிருக்கும். இங்ஙனேயிருக்கச் செய்
தேயும் ஆழ்வானும் பட்டர்க்கு ஆசார்யராயினர். அது
எங்ஙனே யெனில்; ஆழ்வான் திருக்குமாரர்கட்குத் திரு
வாய்மொழிப் பொருள் கற்பித்து வரும்போது "எண்
பெருக்கந் நலத்தொண் பொருளீறில, வண்புகழ் நார
ணன் திண்கழல் சேரே'' என்கிற பாசுரத்தளவிலே
வந்தவாறே, அது திருமந்த்ரார்த்தத்தை விவரிக்கிற
பாசுரமானமையினாலும், மந்த்ரார்த்தம் ஆசார்யரிடத்தி
லேயே கேட்டறியவேண்டியதாதலாலும் அதனை அவர்
கட்குச் சொல்லாது நிறுத்தி 'இதனை உங்கள் ஆசார்யர்
பக்கலிலே கேட்டுக் கொள்ளுங்கள்' என்று சொல்ல,
எழுந்து தம் ஆசாரியரான எம்பார் எழுந்தருளியிருக்கு
மிடத்தைக் குறித்துப் போகப் புக்கவளவில் ஆழ்வான்
''மின்னின் நிலையில மன்னுயிராக்கைகள்'' என்கிற
படியே யாக்கை நிலையாமையைத் திருவுள்ளம்பற்றி
அவர்களை யழைத்து 'இன்னபோது இன்னாரிருப்பார்
இன்னார் போவாரென்று தெரியாது, ஆதலால் இருந்து
கேளுங்கள்' என்று, திருமந்திரத்தைச் சொல்லி அப்பா
சுரத்தின் பொருளையும் விவரித்து 'இப்பாசுரத்தைத்
திருமந்திரத்தின் அர்த்தமாக நினைத்திருங்கள்' என்று
பணித்தருளினமையால் திருக்குமாரர்க்கு ஆழ்வானும்
ஒரு ஆசார்யராக அமைந்தருளினர் என்று ஸம்பிர
தாயம் வல்ல பெரியோர் கூறுவர். பட்டர் ஸஹஸ்ர
நாம பாஷ்யம் அருளிச்செய்யும்போது ஆசார்ய வந்த

நம் செய்கிற முதல் ச்லோகத்தில் "வந்தே கோவிந்த தாதௌ—எம்பாரையும் திருத்தகப்பனாரையும் தொழுகின்றேன்" என்றருளிச் செய்தது உபய ஸம்பந்தமும் தமக்கு உண்டானது பற்றியேயாம். ஸ்ரீரங்கராஜ ஸ்தவத்திலும் இரண்டு ஆசிரியருக்கும் இரண்டு ச்லோகங்களைத் துதியாக இட்டருளினர்.

பட்டரை இளங்குழந்தைப் பருவத்திலேயே ஸ்ரீரங்கநாதன் தனது புத்திரனாக அங்கீகரித்துத் தன்னுடைய ஸந்நிதியிலே திருமணத்தூணினருகே தொட்டிலிடுவித்து ஸ்ரீரங்க நாச்சியாரும் தானுமாகச் சீராட்டி வளர்க்க, அங்ஙனம் வளர்கிற அக்குழந்தை தவழ்ந்து சென்று, பெருமாள் அமுது செய்வதற்குத் திருமுன்பே கொணர்ந்து ஸமர்ப்பிக்கப் படுகிற அடிசிலைக்கைகளால் அள்ளியளைந்து துழாவ, பெருமாள் அது கண்டு உகந்தருளி, "அமிழ்தினும் ஆற்றவினிதே தம்மக்கள், சிறுகையளாவிய கூழ்" (குறள்) என்றபடி இந்த இன்னடிசிலை மிகவும் பிரியமாக அங்கீகரித்தருள்வராம். இப்படி ரங்கநாதன் தம்மை அபிமானித்துப் புத்ரஸ்வீகாரம் செய்தருளப் பெற்ற பாக்கியமுடைமையால் பட்டர் ஸ்ரீரங்கநாதர் புத்ரர் என்றும் வழங்கப்பட்டு வந்தார். "வானிட்ட கீர்த்தி வளர் கூரத்தாழ்வான் மகிழவந்த, தேனிட்டதார் நம்பெருமாள் குமாரர்...பட்டர்" என்று இவரது சிஷ்யரான பிள்ளைப்பெருமாளையங்கார் (திருவரங்கக் கலம்பகக் காப்புச் செய்யுட்களுள் ஒன்றில்) கூறினர். பட்டர் தாமும் ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் பதினேழாம் ச்லோகத்தில் "ஸ்ரீரங்கராஜ கமலாபதலாலிதத்வம்" என்ற பதத்தினால் இதனை ஸ்பஷ்டமாக்கியருளினதும் உணர்க.

இப்பேராசிரியர் ஸகல சாஸ்திரங்களிலும் அபாரமான பாண்டித்யம் பெற்றவர் என்பது இவர் அருளிச்செய்த க்ரந்தங்களுள் ஸஹஸ்ரநாம பாஷ்யம் ஒன்று கொண்டே உணரத் தக்கதாகும். இவர் கவித்திறமையில் ஒத்தாரும் மிக்காரு மில்லாதவர் என்பது இவர் அருளிய ஸ்ரீரங்கராஜஸ்தவ ஸ்ரீகுணரத்ந கோசாதிகளால் நன்கு விளங்கும்.

அருளிச் செயல்களில் அற்புதமான விசேஷார்த்தங்களை அருளிச்செய்வதற்கு இவ்வாசிரியரே அநிதரஸாதாரணமான வல்லமை பெற்றவர் என்பது திவ்யப்ர

பந்த வியாக்கியானங்களில் பெரியவாச்சான் பிள்ளை முதலானோர் அடிக்கடி அருளிச்செய்யு மாற்றால் தெரிகின்றது. வியாக்கியானங்களில், 'என்று பட்டர் அருளிச் செய்வர்' என வருமிடங்களிலெல்லாம் ஒரு விலக்ஷணமான ரஸாநுபவம் கல்நெஞ்சினார்க்கும் உண்டாவது வழக்கம். இவரது நிர்வாஹங்களில் ஒன்றை எடுத்துக் காட்டுவோம்:—

திருநெடுந்தாண்டகத்தில் 'அறுகால சிறுவண்டே தொழுதேனுன்னை' என்ற பாசுரத்தில் வண்டுக்கு ஸ்வாபாவிகமான ஆறுகால்களுள்ளமையை எதற்காகச் சொல்லிற்று? என்று விமர்சிக்கப் புகுந்த சிலர், இரண்டு காலாகவும் நான்கு காலாகவுமின்றியே விரைந்து செல்லுகைக் குறுப்பாக ஆறு கால்கள் இருக்கப் பெற்ற பாக்கியம் என்னே! என்று வியந்து கூறுவதாக நிர்வஹித்தார்களாம். இந்த நிர்வாஹத்தில ஸ்வாரஸ்யமில்லை; வண்டு செல்லுதற்கு ஸாதனம் சிறகேயன்றிக் கால்கள் அல்லவே; ஆதலால் 'அறுகால' என்னும் அடைமொழிக்கு அங்ஙனே கருத்துரைத்தல் பொருந்தாதென்று, பட்டர் அருளிச்செய்வதாவது—தொழுதேனுன்னை என்று மேலேயிருக்கையாலே என் தலையிலே வைப்பதற்கு ஆறுகால்கள் உண்டாகப் பெற்றதே! என்று வியந்து சொல்லுகிறபடி என்பதாம். இதனை விவரிப்போம். தூது சென்று மீண்டு வந்தால் வண்டின் கால்களைத் தலை நிறைய வைத்துக்கொண்டு கூத்தாடக் குதூஹலித்திருப்பதனால் அதற்குச் சேர இங்ஙனே கருத்துரைத்தபடி. ஸ்வாபதேசத்தில் வண்டாகச் சொல்லுவது ஆசார்யர்களை. ஆசாரியனும் ஆசாரியனுடைய தேவியாரும் அவருடைய திருக்குமாரருமாக மூவரும் உத்தேச்யர் என்பது ஆபஸ்தம்ப ஸூத்ரஸித்தம். மூவர்க்கும் சேர்ந்து ஆறு திருவடிகளாதலால் அது தோன்றவே அறுகால சிறுவண்டே! என்றது—என்பது பட்டர் திருவுள்ளம். "கொங்கார் பூந்துழாய் முடி என்குடக் கூத்தற்கென் தூதாய், நுங்கால்கள் என் தலைமேல் கெழுமீரோ நுமரோடே" என்ற திருவாய்மொழிப் பாசுரத்தின் ஸ்வாபதேசார்த்தத்திற்கு மிகவுமிணங்கியதாமிது.

த்ரிபுவன வீரதேவராயன் என்ற அரசன் பட்டர் வைபவத்தைக் கண்டும் கேட்டும் அவரிடத்து மதிப்புக்

கொண்டு ஒருநாள் 'பட்டரே! நீர் நமது அரண்மனைக்கு ஒருவிசை வந்து போம்' என்று சொல்ல, அதற்கு பட்டர் சிறிதும் இணங்காமல் "நம்பெருமாள் அஞ்சலென்ற கைமறித்தாலும் அவர் வாசலொழிய வேறொரு போக்கிட முண்டோ எனக்கு?" என்று சொல்லி மறுத்து விட்டனர் என்பது ப்ரஸித்தம். தன்னைச் சரணமடைந்தவர்கட்கு ஆவன வெல்லாஞ் செய்து அவர்களைப் பாதுகாத்தலையே விரதமாகக் கொண்டு அவர்களுக்கு அபயமளிப்பவனான பரம புருஷனுக்கு அடிமைப்பட்ட நாம் சில சிற்றரசரின் வாசலிலே கிடந்து துவளக் கடவோமல்லோம் என்கிற திண்ணிய அத்யவஸாயத்தை வெளியிட்டவாறு.

இன்னமும் பட்டருடைய வைபவங்கள் அபரிமிதமாகவுண்டு; வல்லார்வாய்க் கேட்டு உணர்க. அடுத்த நஞ்சீயர் வைபவத்திலும் இவரது வைபவமே மிக விளங்கும். ... ...

பட்டர் திருவடிகளே சரணம்.

நஞ்சீயர் வைபவம்.

இப்பெரியார் அத்வைதஸம்ப்ரதாயத்தில் அவதரித்திருந்தவர். மாதவாசார்யர் என்பது இவருடைய திருநாமமாக இருந்தது. வேதாந்தி என்பது இவர்க்குச் சிறப்புத்திருநாமம். ஷட் தர்சநங்களுக்கும் ஷடாஸநமிட்டு நிகரற்ற வித்வானாக மேல்நாட்டில் எழுந்தருளியிருந்தவர் இவர். மதாந்தரஸ்தர்களான வித்துவான்கள் பலரையும் திருத்திப் பணிகொண்டருளின எம்பெருமானார் இவரையும் திருத்திப்பணிகொள்ள விரும்பியிருந்தார். ஆனால் அவருடைய வாழ்நாளில் இந்த மநோரதம் நிறைவேறுதொழியவே தமது சரம ஸமயத்தில் ஆழ்வான் திருக்குமாரரான பட்டரை விசேஷமாக கடாக்ஷித்தருளி தர்சந ஸ்தாபகராக நியமித்தருளின காலத்து "மேல நாட்டிலுள்ள வேதாந்தியைத் திருத்திப்பணி கொண்டு வாழ்விக்கக் கடவீர்" என்று நியமனம் தந்தருளலாயிற்று. பட்டரும் அதனை நிறைவேற்றுதற்கு உரிய ஸமயத்தை எதிர் பார்த்திருந்தார்.

இங்கிலைமையில் மேல் நாட்டில் நின்றும் ஒரு அந்தணர் யாத்திரை யடைவிலே நம்பெருமான் ஸந்நிதிக்கு

விடைகொண்டு பட்டரையும் திருவடி தொழுதார். அப்போது வேதாந்தியின் ப்ரபாவங்களை வார்த்தையடைவிலே அவர் எடுத்துரைத்தார். "மேலநாட்டில் வேதாந்தியென்று ஒரு பெரிய வித்வான் இருக்கிறார்; அவருடைய வித்யையும் கோஷ்டியும் போலே உமக்கு மிருக்கக்கண்டு களிக்கின்றேன்" என்று பட்டரை நோக்கிக் கூறினர். அவர் திரும்பி ஸ்வதேசத்திற்குச் சென்று வேதாந்தியை நோக்கி "ஸ்வாமின்! ஸ்ரீரங்கத்தில் பட்டரென்று ஒருவர் எழுந்தருளியிருக்கிறார்; அவர் அத்விதீய வித்வான்; அவருடைய சிஷ்ய கோஷ்டிகளின் பெருமையும் வாசாமகோசரம்" என்று சொல்ல, வேதாந்தியும், 'அவர் நமக்கு ஒத்த வித்வானோ? அவர்க்கு என்ன சாஸ்த்ரம் வரும்?" என்று கேட்க, அதற்கு அவ்வந்தணர் "பட்டர் உம்மிலும் சிறந்த வித்வானே யாவர்; தர்க்க வியாகரண மீமாம்ஸைகள் முதலிய ஸகல சாஸ்திரங்களும் அவர்க்கு வாசோ விதேயங்கள்" என்று கூறினர். வேதாந்தியும் அது கேட்டு "இவ்விபூதியிலே நமக்கு ஒருவரும் எதிரில்லை; ஷட்தர்சனத்திற்கும் ஷடாஸநமிட்டு அதன்மேலே உயரவிருந்தோம்; பட்டரென்பவர் நம்மிலும் அதிகர் என்று இவர் சொல்லுகிறாரே!" என்று அன்று தொடங்கித் திடுக்கிட்டிருந்தார்.

அவ்வந்தணர் மீண்டும் ஒருகால் அங்கு நின்றும் புறப்பட்டுக் கோயிலுக்கு வந்து பட்டரைத் திருவடித் தொழுது "தேவரீருடைய வைபவங்களையெல்லாம் வேதாந்திக்குச் சொன்னேன்; தர்க்க வியாகரண மீமாம்ஸைகள் முதலிய ஸகலசாஸ்த்ரங்களும் தேவரீர்க்கு வாசோ விதேயங்களென்று சொன்னேன்; அவரும் அது கேட்டு விஸ்மயப்பட்டிருக்கிறார்" என்று விண்ணப்பஞ் செய்ய, அதற்கு பட்டர் 'திருநெடுந்தாண்டக சாஸ்திரம் நமக்குத் தெரியும் என்று வேதாந்திகளிடம் சொல்லிற்றிலீரே!" என்றருளிச் செய்ய, அந்தணரும் அப்படியே சொல்லுகிறேனென்று சொல்லிச் சென்று வேதாந்தியிடம் "பட்டர்க்குத் திருநெடுந்தாண்டக சாஸ்த்ரம் அஸாதாரணம்" என்று கூற, அது கேட்ட வேதாந்தி அந்த சாஸ்த்ரம் இன்னதென்று அறியப் பெறுதவராகையாலே அது என்னோ? வென்று வியப்புக் கொண்டிருந்தார்.

இங்ஙனே சில நாள் சென்றபின், எம்பெருமானாருடைய நியமனப்படி வேதாந்தியைத் திருத்திப் பணி கொள்ளத் திருவுள்ளம்பற்றிய பட்டர் நம்பெருமாள் ஸந்நிதியிலே நியமனம் பெற்றுப் புறப்பட்டு மேல் நாட்டிலெழுந்தருளிக் காவேரிக் கரையில் சிறுப்புத் தூரண்டையில் நின்றருள, அப்போது அங்கு எழுந்தருளியிருந்த திருமலை அனந்தாழ்வான், பட்டர் எழுந்தருளின செய்தியறிந்து சடக்கென வந்து ஸேவித்து 'ஐயோ! ஸுகுமாரரான நீர் காடும் மலையுங் கடந்து இத்தனை தூரம் எழுந்தருளலாமோ?'' என்ன, பட்டரும், அனந்தாழ்வான் திருவடியிலே விழுந்து ஸேவித்து ''மேல்நாட்டிலே போய் வேதாந்தியைத் திருத்தி நம் தர்சநப்ரவர்த்தகராகும்படி பண்ணென்று நம் உடையவர் நியமித்தருளினாரே; அப்படியே நம் பெருமாளும் விடை ஸாதித்து நியமித்தருளினார்'' என்று சொல்ல; அனந்தாழ்வானும் 'எங்கள் குடிக்கரசே! வாரும்' என்று பட்டரை மிகவுமுகந்து அழைத்துக் கொண்டுபோய்த் திருநாராயண புரத்திலே மஹா வைபவமாக மங்களாசாஸநம் செய்வித்து வேதாந்திகள் விஜயஞ் செய்திருக்கிற ஊர்க்கும் எழுந்தருளப் பண்ணிக்கொண்டு சென்றார்.

சிஷ்யர்கள் பலர் பிருதாவளிகள் கூறத் திருப் பல்லக்கிலே பட்டர் எழுந்தருளா நிற்கக் கண்ட அங்குள்ள அந்தணர் சிலர் பட்டரை நோக்கி 'நீர் ஆர்? எங்கேற எழுந்தருளுகிறீர்?' என்று கேட்க; அதற்கு பட்டர் ''நாம் இராமானுசனடிகள்; வேதாந்திகளுடனே தர்க்கிக்கப்போகிறோம்'' என்று கூற, அதுகேட்ட அவர்கள் ''தேவரீர் இப்படி ஸம்ப்ரமத்துடனே எழுந்தருளினால் வேதாந்திகளைக் காண்பதும் அருமைப்படும்; அவருடைய சிஷ்யப்ரசிஷ்யர்கள் நுலைவாசலிலேயிருந்து, வந்த வித்வான்களுடனே நாலாறுமாதம் தர்க்கித்து அவர்களை உள்ளே புகுரவொட்டாதே புறம்பே தள்ளிவிடுகிறார்கள்; அங்ஙனமாகாமே அவரை நேரிற்கண்டு தர்க்கிக்க ஒருபாயமுரைக்கிறோம் கேளும்;

''வேதாந்திகள் மிக்க செல்வச் சிறப்புடையவராதலால் தினப்படியாக ப்ராஹ்மண ஸந்தர்ப்பணை வெகு விசேஷமாக நடத்திவருகிறார். புஜிக்கவருகிற பிரா

மணர்களுடனே கலந்து தேவரீரும் போஜந சாலையிற் சென்று சேர்தல் நன்று; அங்கு வேதாந்திகள் அவசியம் நிரீக்ஷிக்க வருவர், அப்போது காணலாம்; ஆகையாலே பரிஜந பரிபர்ஹங்களையெல்லாம் இங்கே நிறுத்தித் தனியே யெழுந்தருளத்தக்கது'' என்று ஸதுபாயம் சொல்லிப் போனார்கள்.

பட்டரும், அவ்விதமாகவே போஜநசாலையில் சென்று சேர்ந்து, பங்க்தியில் எழுந்தருளியிராமல் வேதாந்திகள் பக்கத்திலேயே நிற்க, அவரும் 'பிள்ளாய்! இங்கு ஏன் நிற்கிறீர்?' என்ன, 'பிக்ஷைக்காக' என்று பட்டர் சொல்ல, 'எல்லோரும் புஜிக்கிறவிடத்திலேபோய் உட்காரும்' என்று வேதாந்திகள் சொல்ல, "நான் அன்ன பிக்ஷைக்கு வந்தேனல்லேன்'' என்று பட்டர் சொல்ல, அது கேட்ட வேதாந்திகள் இவர் வித்வானுயிருக்கக்கூடும் என்றெண்ணி "கா பிக்ஷா?'' என்று கேட்க, பட்டரும், "தர்க்க பிக்ஷா'' என்ன, வேதாந்திகள் இதைக்கேட்டுத் திடுக்கிட்டு "முன்னே நாம் கேள்விப்பட்டிருந்த பட்டரல்லது வேறொருவர் நம் முன்னே வந்து கூசாமல் நின்று இங்ஙனே சொல்லப் பெறுர்; இவர் அந்த பட்டரேயாயிருக்கக்கூடும்'' என்று நிச்சயித்து 'நம்மைத் தர்க்க பிக்ஷை கேட்டீர்; நீர் பட்டரோ?'' என்ன; அவரும் "ஆம்'' என்ன; அவ்வளவிலே வேதாந்திகள், இவருடைய வித்யாவைபவம் காண்போமென்று குதூஹலித்துத் தர்க்கிக்கத் தொடங்கினர். ஒருவர்க்கொருவர் மத்தவாரணம் பிணங்குமாபோலே தர்க்கிக்க, இங்ஙனே ஒன்பதுநாள் சென்ற பின்பு பத்தாநாளில் பட்டர் அத்வைதத்தை ஸஹஸ்ரமுகமாகக் கண்டித்து விசிஷ்டாத்வைதத்தை ஸ்தாபித்துத் திருநெடுந்தாண்டகத்தின் விழுமிய பொருள்களையும் அழகாக உபந்யஸித்தருள, வேதாந்திகள் விஸ்மய ஸந்தோஷ விவசராய் எழுந்திருந்து அஞ்சலி ஹஸ்தராய் நின்று "உம்மை மநுஷ்யமாத்ரமே யென்றிருந்தேன். உம்மோடு நம்பெருமாளோடு வாசியில்லை; உறங்கும் பெருமாள் அவர், உலாவும் பெருமாள் நீர்'' என்று பலவாறு துதித்துத் திருவடிகளிலே விழுந்து தொழுது 'அடியேனை அங்கீகரித்தருள வேணு'மென்று விஜ்ஞாபிக்க, பட்டரும் தாமெழுந்தருளின காரியம் மிக விரைவாகப் பலித்தமைக்குத்

திருவுள்ளமுவந்து வேதாந்திகளுக்குப் பஞ்ச ஸம்ஸ்காரம் ப்ரஸாதித்தருளி மஹாபாகவதோத்தமராக்கி விசேஷ கடாக்ஷமுஞ் செய்தருளி 'வேதாந்திகளே! நீர் ஸர்வஜ்ஞராயிருந்தீர்; நாம் உமக்குப் பரக்கச் சொல்லலாவதொன்றுமில்லை: வேதாந்தார்த்தங்களிலே தெளிவு பெற்ற நீர் இனி மாயாவாத ரீதியை ஸவாஸநமாக த்யஜித்து அருளிச் செயல்களை ஓதி, நம் எம்பெருமானார் தர்சநத்தை நிர்வஹித்துப் போரீர்' என்று நியமித்து, அவ்வளவிலே நம்பெருமாள் ஸந்நிதியில் திருவத்யயநோத்ஸவம் அணித்தான படியை ஸ்மரித்தருளி விரைந்து கோயிலேற வெழுந்தருளப் புறப்பட்டு மார்கழி மாதம் அமாவாஸ்யையன்று திருவரங்கம் வந்து சேர்ந்து அன்றுமாலை நம்பெருமாள் திருமுன்பே விடை கொண்டு நிற்க; பெருமாளும் 'பட்டரே! நீர் புறப்பட்டுப் போன காரியம் என்னாயிற்று?' என்று கேட்டருள, பட்டரும் 'வேதாந்திகள் தேவரீருடைய திருவடிகட்கு அடியவராயினர்' என்று விஜ்ஞாபிக்க, 'அவரைத் திருத்திப் பணிகொண்டபடி எங்ஙனே?' என்று பெருமாள் கேட்க, பட்டர் உடனே 'இங்ஙனே காணும்' என்று சொல்லித் திருநெடுந்தாண்டகத்தைத் திருவோலக்கத்திலே உபந்யஸித்தார். இந்த இதிஹாஸத்தை அடியொற்றியே நாளைக்கும் நம்பெருமாள் ஸந்நிதியில் திருவத்யயநோத்ஸவத் தொடக்கத்திற்கு முன்னாள் திருநெடுந்தாண்டகத் திருநாளென்று மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றதென்று பெரியார் கூறுவர்.

இது இங்ஙனமிருக்க, வேதாந்திகள் ஸ்வதேசத்திலே திருமாலடியார்களைப் பூசித்து வரும் நாளில், ஸம்ஸாரத்தில் விரக்தி யெய்தி உத்தமாச்ரமத்தை ஸ்வீகரித்து, இனி பட்டர் திருவடிவாரத்திலேயே நிழலும் அடிதாறுமாக நித்யவாஸஞ் செய்யவேணுமென்று அறுதியிட்டுக் கோயிலை நோக்கி யெழுந்தருளா நிற்கையில், சிறுப்புத்தூரிலே அனந்தாழ்வானைக் கண்டு ஸேவித்து நிற்க, அவரும் 'வாரீர் வேதாந்திகளே! ஸுகுமாரரான நீர் இங்ஙனே செய்யலாமோ? வேர்த்தபோது நீராடிப் பசித்தபோது அமுது செய்து பட்டர் திருவடிகளே சரணமென்றிருந்தால் உம்மைப் பரமபதத்தினின்றும் தள்ளி விடுவா

ருண்டோ? இனி என்? திருமந்திரத்திலே பிறந்து த்வயத்திலே வளர்ந்து த்வயைக நிஷ்டராவீர்' என்று ஆசீர்வதித்துப் போகவிட்டார். வேதாந்திகளும் பயணகதியிலே போய்க் கோயிலேற எழுந்தருளி பட்டர் திருவடிகளிலே வேரற்ற மரம்போலே விழுந்து கிடக்க, பட்டரும் மிகவு முகந்தருளி 'நம்முடைய சீயர் வந்தார்' என்று வாரியெடுத்துக் கட்டிக்கொண்டருளி ஒரு க்ஷணமும் பிரியாமல் தம்முடைய ஸந்நிதியிலேயே வைத்துக்கொண்டு ஸகலார்த்தங்களையும் ப்ரஸாதித்தருள, ஜீயரும் பட்டரை யன்றித் தேவுமற்றறியேன் என்றிருந்தார். [பட்டர் 'நம்முடைய சீயர்' என்று சொல்லி அணைத்துக்கொண்ட அன்று தொடங்கி வேதாந்திகளுக்கு நஞ்சீயர் என்று திருநாமம் வழங்கலாயிற்று] உபதேச ரத்தினமாலையில் "நம்பெருமாள் நம்மாழ்வார் நஞ்சீயர் நம்பிள்ளை யென்பர், அவரவர்த மேற்றத்தால்-அன்புடையோர், சாத்து திருநாமங்கள் தாமென்று நன்னெஞ்சே, ஏத்ததனைச் சொல்லி நீயின்று" என்ற பாசுரம் இங்கு அநுஸந்திக்க வுரியது.

நஞ்சீயருடைய ஆசார்ய ப்ரேமம் பரம விலக்ஷண மானது. ஒரு கைசிக த்வாதசியன்று பட்டர் ப்ரம்ம ரதத்திலெழுந்தருளித் திருவீதி யலங்கரிக்கப் புறப் பட்டவாறே நஞ்சீயரும் ஸ்ரீபாதம் தாங்கப்புக "உத்த மாச்ரமியாய் த்ரிதண்ட தாரியான வுமக்கு இக்காரியம் தகாது" என்று பட்டர் முதலானோர் மறுத்துக் கூற, அப்போது நஞ்சீயர் 'எனக்கு நீ துணையாகி என்னை ரக்ஷிக்கவேணுமென்னும் பொருளுடையதான 'ஸகா மா கோபாய' என்கிற மந்திரத்தைச் சொல்லி "ஸ்வீக ரிக்கப்பட்ட இந்த முக்கோல் தானோ இன்று எனக்கு விரோதி யாகிறதோ? இக்கோல் எனக்குத் துணை யல்லவோ? ஸ்வரூப ரக்ஷணத்திற்கு இக்கோல்இடையூ றாயின். இது எனக்கு வேண்டா' என்று சொல்லி த்ரி தண்டத்தை விட்டெறியப் போனாராம். அப்போது அவருடைய பக்தி விசேஷத்தைக்கண்டு அனைவரும் வியந்தனர்.

பட்டர் திருவணையாட எழுந்தருளுகிறபோது, பகலெல்லாம் வழிநடந்தருளின ஆயாஸத்தாலே ஒரு தூற் றிடியிலே நஞ்சீயர் மடியிலே திருமுடியை வைத்துக் கண்வளர்ந்தருள, ஓரிரவெல்லாம் துடைமாறுதல்

அசைத்தல் செய்யாதே நஞ்சீயர் இருந்தார் என்பதும் இவருடைய ஆசார்ய ப்ரேமத்தின் கனத்தை விளக்கும்.

நஞ்சீயர் நெடுநாள் வரையில் அருளிச் செயல்களின் வாஸனையும் அறியாதவரா யிருந்துவைத்தும், பட்டரை ஆச்ரயிக்கப் பெற்றபின்பு ஆசார்ய கடாக்ஷ விசேஷத்தினால் சிறிது காலத்திலேயே திவ்யப்ரபந்தங்க ளெல்லாவற்றையும் ஓதித் தரித்து, அவற்றில் விசேஷார்த்தங்கள் நிர்வஹிப்பதில் நல்ல விரகராய் விளங்கினர்.

சிறிய திருமடலில் "அவட்கு மூத்தோனை வெந்நரகம் சேராவகையே சிலை குனித்தான்" என்ற விதற்கு ஸாமாந்யமாகப் பலரும் பொருள் சொல்லக்கூடிய விதம் என்னெனில்; கரனை நரகத்திற்குப் போக வொட்டாமல் வீர ஸ்வர்க்கத்திற்குப் போகச் செய்தார் பெருமாள் என்று. இதற்கு இங்ஙனல்ல பொருள். வளைத்த வில்லுங் கையுமாய் நின்ற பெருமானைக் கண்ட கரன் 'நாம் மேலேபோய் வேறொரு நரக யாதனை அநுபவிக்க வேண்டா; எல்லா நரக வேதனையும் நமக்கு இங்கே அநுபவித்தாயிற்று' என்று குடல் மறுகும்படி போர்க்களத்திலே அவனைப் படாத பாடும் படுத்தினான் என்று பட்டர் அருளிச் செய்யும் பொருள். நஞ்சீயர் பட்டரை ஆச்ரயிப்பதற்கு முன்னே ஸ்வதேசத்தில் வாழுங்காலத்து பட்டருடைய சிஷ்யரொருவர் நஞ்சீயரைச் சந்தித்து வார்த்தை யாடும்போது 'எங்களுடைய திவ்யப் பிரபந்தத்தில் "அவட்கு மூத்தோனை வெந்நரகஞ் சேராவகையே சிலை குனித்தான் என்றிருக்கிறது; வேதாந்திகளே! இதற்கு நீங்கள் என்ன பொருள் சொல்லுவீர்கள்?" என்று கேட்க; அவர் ஸாமாந்யமாக நெஞ்சிற்பட்ட பொருளைச் சொல்லிவிட்டு, 'உங்களுடைய பட்டர் எங்ஙனே சொல்லுவர்?' என்று கேட்க, மேலே விவரித்த பொருளை அவர் கூற, இப்பொருள் கூறவல்ல பட்டரை நாம் ஸேவிக்கவேணுமென்று அவருக்குக் காதல் கிளர்ந்திருந்ததாகப் பெரியோர் கூறுவர். நஞ்சீயர் வைபவம் நாம் சொல்லுந்தரமன்று. ... ...

நஞ்சீயர் வைபவம் முற்றிற்று.

நம்பிள்ளை, வடக்குத்திருவீதிப் பிள்ளை, பெரியவாச்சான்பிள்ளை, பிள்ளைலோகாசாரியர் இவர்களின் வைபவம்.

P. B. அண்ணங்கராசார்ய ஸ்வாமி, ஸ்ரீ காஞ்சீ.

ஸ்ரீவைஷ்ணவ பூர்வாசார்ய பரம்பரையில் ஸ்ரீமந் நாதமுனிகள் தலைமை பெற்றவர். அவருடைய திருவடிகள் உய்யக்கொண்டார். அவருடைய திருவடிகள் மணக்கால் நம்பி. அவராலே திருத்திப் பணிகொள்ளப் பட்டவர் ஆளவந்தார். அவருடைய திருவடிகளில் ஆச்ரயித்திருந்த பல ஆசிரியர்களில் தலைவர் பெரிய நம்பி. அவரை ஆச்ரயித்தவர் எம்பெருமானாரென்கிற ஸ்ரீராமாநுஜர். அவருடைய சிஷ்யர்களில் *ராமாநுஜ பதச் சாயா* என்று ப்ரஸித்தரான எம்பார் தலைமை பெற்றவர். அவருடைய திருவடிகளில் ஆச்ரயித்தவர் கூரத்தாழ்வானுடைய திருக்குமாரரான ஸ்ரீபராசர பட்டர். அவர் எம்பெருமானாரைப் போலவும் அவர்க்கு மேற்படவும் பிரபாவம் மிக்கு விளங்கினார். அவராலே திருத்திப் பணி கொள்ளப்பட்டவர் நஞ்சீயரென்று ப்ரஸித்தரான மேல் நாட்டு வேதாந்திகள். பட்டர் காலத்திலிருந்தே திவ்ய ப்ரபந்தார்த்த ப்ரவசனங்களுக்கு மிக்க சிறப்பு விளைந்தது. நம்பிள்ளை வடக்குத் திருவீதிப் பிள்ளை பெரியவாச்சான்பிள்ளை ஆகிய ஆசிரியர்கள் மூவரும் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய ஸர்வஸ்வமான திவ்யப் பிரபந்தங்களுக்குப் புத்துயிரளித்தவர்கள். பிள்ளைலோகாசாரியரும் அப்படியே. இவர்களது பிரபாவம் இங்குச் சுருங்க வரையப்படுகின்றது.

நஞ்சீயருடைய திருவடிகளிலே ஆச்ரயித்தவர்களில் தலைவர் நம்பிள்ளை. இவர்க்கு இயற்கையான திருநாமம் 'நம்பூர் வரதராஜாசார்யர்' என்பது. ஸ்வாசார்யரான நஞ்சீயர் உகந்து சாத்தின திருநாமம் நம்பிள்ளையென்பது. அந்தத் திருநாமம் சாத்துகைக்கு அடியென்னென்னில்; நஞ்சீயர் பட்டருடைய நியமனப்படி திருவாய்மொழியின் திவ்யார்த்தங்களை ப்ரவசனஞ் செய்வதையே போது போக்காகக் கொண்டு வாழ்ந்து வந்தார் திருவரங்கம் பெரிய கோயிலில். அவருடைய

காலக்ஷேப கோஷ்டியில் அந்வயித்திருந்தவர்களில் நம்பூர் வரதராஜாசார்யரும் ஒருவராயிருந்து வந்தார். இவர் நீறு பூத்த நெருப்புப்போல இருந்து வந்த படியாலே இவருடைய ஞான வைபவம் முதலிய பெருமைகளை விசேஷித்து யாரும் அறியாதிருந்தனர்.

இப்படியிருக்கையில், நஞ்சீயர் திருவாய்மொழிக்குத் திருக்குருகைப் பிரான் பிள்ளானுடைய ஆறாயிரப் படியிற் காட்டிலும் சிறிது விரிவாக வொரு வியாக்கியானமிடும்படி பட்டருடைய நியமனம் பெற்றிருந்ததனால் ஒன்பதினாயிரப்படி யென்றொரு வியாக்கியானம் இட்டருளியிருந்தார். அதைச் செவ்வையாகப் பட்டோலை கொள்ள வல்லாரிடம் கொடுத்து எழுதுவிக்க வேணுமென்று கருதி இதற்குத் தகுந்தவர்கள் யாரேனுமுளரோ வென்று அந்தரங்கர்களை விசாரிக்கையில் 'நம்பூர் வரதராஜாசார்யரென்றொருவர் ஸ்வாமியின் காலக்ஷேப கோஷ்டிக்குத் தவறாது வருகின்றாரே; அவர் நல்ல விரகர்; எழுத்திலும் வல்லவர்; அவரைக் கொண்டு இப்பணியை நிறைவேற்றிக் கொள்ளலாம்' என்று கூறினார்கள். பிறகு அவரை அருகே வரவழைத்து ஆராய்ந்து பார்க்கையில் அவருடைய யோக்யதை ஒப்புயர்வற்றதென்று தெரிய வந்தது; அதனால் உள்ளம் பூரித்து அவர்பால் விசேஷ கடாக்ஷம் செய்தருளித் தம்முடைய ஒன்பதினாயிரப் படியை வரியடைவே அவர்க்கு ப்ரவசனமும் செய்து அதையெழுதித் தரும்படி ஸ்ரீகோசத்தை அவரிடம் கொடுத்தார். அதைப் பெற்றுக் கொண்டவர் தம்மூருக்குச் சென்று எழுதிக் கொண்டு வருவதாகச் சொல்லிப் போகையில் திருக்காவேரியில் நீந்திச் செல்ல நேர்ந்தது; அப்போது திருமுடியில் கட்டிக்கொண்ட அந்த ஸ்ரீகோசம் நெகிழ்ந்து விழுந்து வெள்ளத்திற் போய் விடவே இப்படி அபசாரமாய்த் தலைக்கட்டிற்றே யென்று வருந்த நேர்ந்தது. ஆனாலும் இவர் தாம் அந்த வ்யாக்யானத்தை ஸ்வாசார்யர் திருவடிகளிலே வரியடைவே கற்றிருந்தபடியாலும் அவருடைய கருணை கடாக்ஷத்தை விசேஷித்துப் பெற்றிருந்த படியாலும் அவருடைய திருவடிகளைச் சிந்தித்துக் கொண்டே பட்டோலை கொள்ளத் தொடங்கி விரைவில் எழுதி முடித்து ஸ்ரீகோசத்தை நஞ்சீயர் திருவடி

களிலே கொண்டு வைத்தார். 'நாம் கொடுத்த ஏடு எங்கே?' என்று அவர் கேட்கையில், நடந்தது நடந்த படியே விண்ணப்பஞ் செய்ய வேண்டியதாயிற்று. பிறகு நஞ்சீயர் ஸ்ரீகோசத்தை அவிழ்த்துக் கடாக்ஷிக்கையில், தாமருளிச்செய்த ஸ்ரீஸூக்திகள் விடாமலும் தம்மிடம் அவர் கேட்டிருந்த சில அர்த்த விசேஷங்களும் பொருத்தமாக அமைந்தும் விரிவு மில்லாமல் இருந்த அழகுக்கு மிகவுகந்து 'வாரீர் நம்முடைய பிள்ளையே!' என்று எடுத்தணைத்துக் கொண்டார். அது முதலாக நம்பிள்ளை யென்றே இவர் வழங்கப் பெற்று வந்தார். திருக்கலிகன்றிதாஸர் என்பதும் இவர்க்கு நஞ்சீயர் சாத்தின திருநாமம்.

இவருடைய ஞான வைபவத்தைப் பற்றி நாம் விரிவாக எழுத வேண்டுமோ? பெரிய திருமொழி வ்யாக்யானத்தில் "ஓதுவாய்மையு முவனியப் பிறப்பு முனக்கு முன் தந்த அந்தணனொருவன்" என்ற விடத்து "முற்பட த்வயத்தைக் கேட்டு இதிஹாஸ புராணங்களையும் அதிகரித்துப் பரபக்ஷ ப்ரதிக்ஷேபத்துக் குடலாக ந்யாய மீமாம்ஸைகளுமதிகரித்து, போதுபோக்கும் அருளிச் செயலிலே யாம் நம்பிள்ளையைப் போலே" என்று பெரிய வாச்சான் பிள்ளை யருளிச் செய்துள்ள ஸ்ரீஸூக்தி யொன்றே இவருடைய ஞானப்பெருமையை விளக்கக் கூடியது. திவ்யப்ரபந்தங்களுக்கும் இதிஹாஸ புராணாதிகளுக்கும் ஆழ்ந்து இன்சுவையே வடிவெடுத்த அர்த்தங்களை யருளிச் செய்வதில் இவர்க்கு ஒத்தாரும் மிக்காருமில்லை.

லோகாசார்யரென்கிற திருநாமமும் இவர்க்கு உண்டு. அது நிகழ்ந்த வரலாறு கேண்மின்; இவர் கோயிலில் வாழ்ந்த காலத்தில் ஸகல ஸ்ரீவைஷ்ணவர்களும் இவர் திருவடிகளிலே ஆச்ரயித்து ஸகலார்த்தங்களும் கேட்டு வந்தார்கள். 'நம்பெருமாள் கோஷ்டியோ நம்பிள்ளை கோஷ்டியோ' என்னும்படி மிகப்பெரிய சிஷ்ய கோஷ்டி ஸம்பத்துடன் வாழ்ந்து வந்தார். அப்போது முதலியாண்டான் திருப்பேரனரான கந்தாடைத் தோழப்பரும் அங்கு வாழ்ந்து வந்தார் அவரும் ஸித்தாந்த யிருக்கச் செய்தேயும் அவரிடத்தில் ஒருவரும் ஆச்ரயியா திருக்கவே அவர்க்குப் பொறாமை யுண்டாகி ஒரு நாள் நம்பிள்ளையைப் பெருமாள்

கோஷ்டியிலே திரஸ்காரமான வார்த்தைகளைச் சொல்லிப் பரிபவித்து விட்டுத் திருமாளிகைக் கெழுந்தருளினார். அவருடைய தேவிகள் இந்த அஸஹ்யாபசாரத்தை யறிந்து கண்ணுங் கண்ணீருமாக வந்து 'அந்தோ! இப்படியும் பரமாசார்யர் திருவடிகளிலே அபசாரப்படுவீரோ? உமக்கு உய்யும் விரகுண்டோ? என் செய்தீர்! என் செய்தீர்! ஐயோ' என்று பலவுஞ்சொல்லி அநுதாபத்தை யுண்டாக்க, தோழப்பரும் அநுதபித்து நம்பிள்ளை திருவடிகளிலே சென்று க்ஷமை வேண்ட வேணுமென்று பாரித்திருந்தார். அதற்குள்ளே நம்பிள்ளை தாமே தோழப்பர் திருமாளிகை யேறவந்து வேரற்ற மரம்போலே விழுந்து தெண்டனிட்டு, தேவரீருடைய திருவுள்ளம் கன்றும்படி வர்த்தித்த அடியேனுக்கு தேவரீருடைய க்ஷமையல்லது புகலில்லை யென்று பலவுமருளிச் செய்து தாம் க்ஷாமணம் பண்ணிக் கொண்டார். அப்போது தோழப்பர் அந்த மஹா குணத்திற்கு வியந்து "ஸ்வாமின்! தேவரீரை இத்தனை நாளும் சிறிது பேர்களுக்கு ஆசார்யராக எண்ணியிருந்தேன்; இப்போது லோகத்துக் கெல்லாம் ஆசார்யர் தேவரீர் என்று திண்ணமாகக் கொண்டேன்" என்றார். அது முதலாக நம்பிள்ளைக்கு லோகாசார்ய ரென்று திருநாமம் வழங்கி வந்தது; "துன்னுபுகழ்க் கந்தாடைத் தோழப்பர் தம் முகப்பால் என்னவுலகாரியனோவென்றுரைக்க, பின்னை யுலகாரியனெனும் பேர் நம்பிள்ளைக் கோங்கி, விலகாமல் நின்றதென்றும் மேல்" என்ற உபதேச ரத்தின மாலைப் பாசுரம் இங்கே அநுஸந்திக்கத் தகும்.

நம்பிள்ளை திருவடிகளில் பலர் ஆச்ரயித்திருந்தாலும் பின்பழகிய பெருமாள் ஜீயர்க்கு இருந்த ஆசார்ய பக்தி ஒப்பற்றதென்று தெரிகிறது; உபதேச ரத்தின மாலையில் "பின் பழகராம் பெருமாள் சீயர் பெருந்திவத்தில் அன்பதுவுமற்று மிக்க வாசையினால் நம்பிள்ளைக்கான வடிமைகள் செய் அந்நிலையை நன்னெஞ்சே! ஊனமற வெப்பொழுது மோர்" என்று விசேஷித்து அருளிச் செய்கையாலே.

இப்பேராசிரியரின் திருவடிகளில் பணிந்து அல்லும் பகலும் ஸகலார்த்தங்களையுங் கேட்டுத் தரித்த

வடக்குத் திருவீதிப் பிள்ளையும் பெரியவாச்சான் பிள்ளையும் உலகுக்குச் செய்திருக்குமுபகாரம் கைம்மாறற்றது.

பட்டருடைய ஸந்ததியில் தோன்றி மஹா வித்வானாயிருந்த நடுவில் திருவீதிப்பிள்ளை பட்டரும் கந்தாடைத் தோழப்பர் போலவே நம்பிள்ளையிடத்தில் பொறுமை கொண்டிருந்தவர். அவர் ஒரு நாள் ராஜ ஸபைக்குச் சென்றிருந்தார். அந்த ராஜா மஹா விவேகியுமாய், தன்னிடம் வருகிற பண்டிதர்களை யெல்லாம் ஸ்ரீ ராமாயணாதி க்ரந்தங்களில் கேள்வி கேட்பவனுமாயிருந்தபடியால இந்த பட்டரையும் ஸ்ரீ ராமாயணத்தில் ஒரு கேள்வி கேட்டான். அதாவது: ஸ்ரீ ராமபிரான் நாராயணத்வ ப்ரயுக்தமான பரத்வத்தை மறைத்துக் கொண்டு அஜ்ஞனைப் போலவும் அசக்தனைப்போலவும் அவதரித்திருக்கையில் "मया त्वं समनुज्ञातो गच्छ लोकाननुत्तमान्—மயா த்வம் ஸமநுஜ்ஞாதோ கச்ச லோகாநநுத்தமாந்" என்று ஜடாயுவுக்கு முக்தி யளித்தது எங்ஙனே பொருந்தும்?—என்று. இக் கேள்விக்கு த்ருப்திகரமான விடையளிக்க பட்டருக்கு ஸ்புரியாமையாலே ஆலோசிக்க வேண்டியதாயிற்று. அப்போது ராஜாவும் அந்யபரனாயிருக்க, இவருடைய பாக்ய வசத்தாலே அங்கு ஒரு ஸ்வாமி தென்பட்டார். அவர் நம்பிள்ளை திருவடிகளில் அர்த்த விசேஷங்கள் கேட்டவர்; இந்த பட்டர் அவரை அருகே வரவழைத்துச் செவியோடு செவி மடுத்து 'இவ்வரசன் கேட்ட கேள்விக்கு நம்பிள்ளை எப்படி நிர்வஹிப்பது?' என்று கேட்டார். அவர் "सत्येन लोकान् जयति—ஸத்யேந லோகாந் ஜயதி" என்கிற ச்லோகத்தைக் கொண்டு நிர்வஹிப்பர் என்று சொல்ல, அதை இவர் தமது மனதில் நன்றாக வாங்கிக் கொண்டு பிறகு ராஜாவிடம் உபந்யஸித்தார். அரசனும் மிகவு உகந்து விசேஷ ஸத்காரங்கள் செய்தான். அந்த ஸத்காரங்களை ப்ராமாணிகரானவிவர் தம் க்ருஹத்திற்குக் கொண்டுபோக விரும்பாமல் நம்பிள்ளை திருவடிகளிலே கொண்டு ஸமர்ப்பித்து தேவரீருடைய ஸ்ரீஸூக்திகளில் சிந்திப்போன வொரு சொல்லுக்குப் பெற்ற ஸத்காரமிது; இனி அடியேனை அங்கீகரித்தருளி

வாழ்விக்க வேணுமென்று வேரற்ற மரம்போல
விழுந்து ப்ரார்த்திக்க, அவரையும் சேர்த்துக்கொண்டு
உய்வித்தார். நம்பிள்ளையின் பகவத் விஷயோபந்யா
ஸங்களை அவரும் ஏடுபடுத்தி ஸ்பாத லக்ஷம் க்ரந்த
மாக்கி யிருந்தார். அதிகாரி தௌர்லப்யத்தைக் கணி
சித்து அதை நம்பிள்ளை ப்ரசாரத்திற்கு நியமித்தருள
வில்லை.

நம்பிள்ளையின் வைபவம் அர்த்த விசேஷங்களைப்
பொறுத்ததேயாதலால் அவ்வர்த்த விசேஷங்கள் திவ்
யப்ரபந்த வியாக்கியானங்களிலும் வார்த்தாமாலை
முதலிய வற்றிலும் பாக்யசாலிகளால் உய்த்து உண
ரத்தக்கன.

இப்பேராசிரியருடைய தனியன் ;

"वेदान्त वेद्यामृत वारिराशे:
वेदार्थ सारामृत पूरमग्र्यम् ।
आदाय वर्षन्तमहं प्रपद्ये
कारुण्य पूर्णं कलिवैरि दासम् ॥

வேதாந்த வேத்யாம்ருத வாரிராசே:
வேதார்த்த ஸாராம்ருத பூரமக்ர்யம்,
ஆதாய வர்ஷந்தமஹம் ப்ரபத்யே
காருண்ய பூர்ணம் கலிவைரி தாஸம்."

வடக்குத் திருவீதிப் பிள்ளை வைபவம்.

ஆனி மாதத்தில் பெரியாழ்வாருடைய திருவவ
தார நன்னாளாகிய ஸ்வாதி நக்ஷத்திரத்தில் இப்பே
ராசிரியர் திருவவதரித்தருளினார். ஸ்ரீவசன பூஷணம்
முமுக்ஷுப்படி முதலிய அஷ்டாதச ரஹஸ்யங்களை
யருளிச் செய்த பிள்ளை லோகாசாரியர்க்கும், ஆசார்ய
ஹ்ருதயமருளிச் செய்த அழகிய மணவாளப் பெரு
மாள் நாயனார்க்கும் திருத்தகப்பனார் இவர். இவ
ருடைய நிஜநாமதேயம் ஸ்ரீக்ருஷ்ணபாதகுரு வென்ப
தாம். இந்தத் திருநாமமே பெரிய வாச்சான் பிள்ளை
யென்கிற மற்றோராசிரியர்க்கும் இருந்ததனால் நம்
பிள்ளை திருவடிகளில் ஆச்ரயித்திருந்த விவர்களுக்கு
வாசி தெரிவதற்காக இவர் வடக்குத் திருவீதிப்பிள்ளை

யென வழங்கப்பட்டு வந்தார். திருவரங்கம் பெரிய கோயிலில் வடக்குத் திருவீதியில் இவர் வாழ்ந்து வந்ததுவே இத்திருநாமத்திற்குக் காரணம் “श्रीकृष्ण पाद पादाब्जे नमामि शिरसा सदा । यत्प्रसाद प्रभावेन सर्वसिद्धिरभून्मम- ஸ்ரீக்ருஷ்ண பாத பாதாப்ஜே நமாமி சிரஸா ஸதா, யத்ப்ரஸாத ப்ரபாவேந ஸர்வஸித்திரபூந்மம” என்பது இவருடைய தனியன்.

இப்பேராசிரியருடைய திவ்விய சரித்திரங்களைப் பற்றி முன்னோர்கள் விசேஷமாக எழுதி வைக்கவில்லை யாதலால் இவருடைய ஞானப் பெருமைகளை இங்கு விசேஷமாக அநுபவிப்போம். பகவத் விஷயமென வழங்கப்படுகிற [திருவாய்மொழி வியாக்கியானமான] ஈடு முப்பத்தாறாயிரப் படியை இவ்வாசிரியரே பட்டோலை கொண்டவர். உபதேச ரத்தின மாலையில் *தெள்ளியதா நம்பிள்ளை செப்பு நெறி தன்னை, வள்ளல் வடக்குத் திருவீதிப்பிள்ளை, இந்த நாடறிய மாறன் மறைப்பொருளை நன்குரைத்தது, ஈடு முப்பத்தாறாயிரம்* என்றருளிய பாசுரத்தின்படி, நம்பிள்ளையின் பகவத் விஷயோபந்யாஸங்களைக் கேட்டுத் திருவுள்ளத்தில் தரித்துக் கொண்டிருந்து அற்புதமாகப் பட்டோலை கொண்ட பெருமை இவ்வாசிரியர்க்கு அஸாதாரணமானது. சிலர் கூறுவதாவது. நம்பிள்ளை சோதிவாய் திறந்து அருளிய பங்க்திகள் எப்படியோ அப்படியே அப்பங்க்திகளே ஈட்டில் அமைக்கப் பட்டனவென்று. இதில் ஔசித்யம் சிறிதுமில்லை. வாசிகவ்யவஹார நடை வேறு; க்ராந்திக சைலி வேறு. கங்காப்ரவாஹம்போல் நம்பிள்ளையருளிச் செய்தவையாய், கரை கட்டாக் காவேரி யென்னும்படியாயமைந்த ஸ்ரீஸூக்திகள் அப்படியே ஏடு படுத்தப்பட முடியாதவை. மஹோபந்யாஸங்களில் குறிப்பெடுத்துக் கொள்ளும் முறையில் அமைந்தது ஈடு. ஈட்டின் பங்க்தி ஸந்நிவேசமானது, வேறு எந்த க்ரந்தத்திலும் கண்டறியாததும் காண முடியாததுமான அத்விதீய விலக்ஷண ஸந்தர்ப்பம். ஸம்ஸ்க்ருத வித்வான்களும் தமிழ் வித்வான்களும் தனித்தனியே உள் குழையத்தக்க உயர்ந்த ரசநாவிசேஷம்.

“गगनं गगनाकारं सागरस्सागरोपम:—ககநம் ககநாகாரம்

ஸாகரஸ்ஸாகரோபம:" என்கிறாப் போலே "ஈட்டுக்குவமை ஈடே" என்ன வேண்டு மத்தனை. மணிப்ரவாள நடையில் மற்றும் பலவாசிரியர்களுமெழுதியுள்ளார்களெனினும், இவருடைய ரசனாவைகரி தேனும் பாலும் நெய்யும் கன்னலு மமுது மொத்து விளங்குமழகு அநுபவ ரஸிகர்களுக்கே அறிய வெளிது. அர்த்தம் தெரியாமற் போனாலும் பங்க்தி ஸந்நிவேசத்தை ஸேவித்த மாத்திரத்திலே இரும்பு போல் வலிய நெஞ்சும் இறையிறை யுருகும். பெரிய புலவர்கள் பத்தெட்டு வரிகளில் எழுத வேண்டிய பொருள்களை ஒரு வரியில் வெகு கம்பீரமாக அடக்கி யெழுதுந்திறன் இவ்வாசிரியர்க்கே அமைந்தது.

மணவாள மாமுனிகள் இவ்வாசிரியர்க்கு வள்ளல் என்று விசேஷணமிட்டருளினார். [உதாரர் என்றபடி.] ஔதார்யம் மிக்கவர்கள் உலகில் பலர் புகழ் பெற்றிருந்தாலும் இவரொருவருடைய ஔதார்யமே உண்மையில் கொண்டாடத்தக்கதும் ஒப்புயர்வற்றதுமாம். ஏற்கெனவே திருக்குருகைப் பிரான் பிள்ளானருளிச்செய்த ஆறாயிரப்படி வியாக்கியானமும், நஞ்சீயரருளிச்செய்த ஒன்பதினாயிரப்படி வியாக்கியானமும் இருந்தாலும் அவை மிகவும் ஸம்க்ஷிப்தங்களாகையாலே, அநுபவ ரஸிகர்களுக்குப் பரிபூர்ண த்ருப்தியை விளைக்கப் போதாதனவை. *நம்பிள்ளை தம்முடைய நல்லருளாலேவியிடப் பெரியவாச்சான் பிள்ளை யருளிச்செய்த இருபத்து நாலாயிரப்படி வியாக்கியானம் அவை போலே ஸம்க்ஷிப்த மன்றிக்கே சிறிது விரிவாகவே யிருந்தாலும், ஈடு முப்பத்தாறாயிரப்படி திருவவதரித்த பின்பு அதுவும் ஸம்க்ஷிப்தமே யென்னும்படியாயிற்று. அநேக ஸ்தலங்களில் இருபத்து நாலாயிரப்படி பங்க்திகளும் ஈட்டுப் பங்க்திகளும் ஒற்றுமைப் பட்டிருக்கையாலே முன்னமவதரித்ததான அந்த வியாக்கியானத்தைத் துணைகொண்டே ஈடு எழுதியருளப் பட்டதெனத் தெரிகின்றது. ஆயினும், ஸ்ரீஸூக்தி காம்பீர்யமும் அர்த்த பௌஷ்கல்யமும் ஈட்டுக்கு அஸாதாரணமாயிருப்பது பற்றியே இதுவே எங்கும் காலக்ஷேப க்ரந்தமாகக் கொள்ளப்பட்டுக் குலாவப் பெறுகின்றது. ஸ்ரீராமாயணம் முதலிய இதிஹாஸ புராணங்களிலிருந்து மேற்கோளாக ஆங்காங்குப் பல பல ச்லோகங்

களை யெடுத்து இனிமையே வடிவெடுத்ததாக வியாக்கியானஞ் செய்தருளுமழகு ஈட்டுக்குச் சிறந்த அணிகலன்.

திருவிருத்தத்திற்கும் இங்ஙனே ஈடு வியாக்கியானம் அமைந்துளது. அஷ்டச்லோகி பெரியபடி வியாக்கியானத்திலே "வடக்குத் திருவீதிப் பிள்ளை அஷ்டாக்ஷர தீபிகையிலே அருளிச் செய்தருளினார்" என்று காண்கையாலே அஷ்டாக்ஷர தீபிகை யென்கிற க்ரந்தமும் இவ்வாசிரியரது க்ருதி யென்று தெரியவருகின்றது. (அது லுப்தம்). இப்பேராசிரியருடைய பெருமைகளில் ஒன்றை நாம் உள் குழைந்து போற்றத் தக்கது; அது யாதெனின்; உலகுக்கெல்லாமுயிரான பிள்ளை லோகாசார்யரையும் அழகிய மணவாளப் பெருமாள் நாயனாரையும் பெற்றுக் கொடுத்தருளியதே.

பெரியவாச்சான் பிள்ளை வைபவம்

ஆவணி மாதத்து ரோஹிணி நக்ஷத்திரத்தில் பூர்வசிகி ஸந்ததியில் திருவவதரித்தவர் பெரிய வாச்சான் பிள்ளை. இவ்வாசிரியருடைய சரித்திர வரலாறுகளைப் பற்றியும் விசேஷமாக அறியப் பெறுகின்றிலோம். இவர் தம்மால் உலகுக்கு விளைந்த மஹோபகாரம் அபரிமிதமாதலால் அதைப்பற்றியே சிறிது பேசியுகப்போம். ஆழ்வார்களின் அருளிச் செயல்களுக்கெல்லாம் மிகச் சிறந்த வியாக்கியானமும், ஸ்ரீராமாயணத்தில் பல பல ச்லோகங்களுக்கு இன்சுவையே வடிவெடுத்த வியாக்கியானமும் ஸ்தோத்ர ரத்நாதி வியாக்கியானங்களும் இவரருளிச் செய்தவை. இவருடைய அப்ரதிமமான பாண்டித்யத்தையும் அப்ரமேயமான மேதாப்ரதிபா விலாஸத்தையும் நன்கு புலப்படுத்துகின்றன. வடக்குத் திருவீதிப் பிள்ளையுமிவரும் நம் பிள்ளை திருவடிகளில் ஸப்ரஹ்மசாரிகளாக வாழ்ந்து ஸகலார்த்தங்களையும் ஸம்சய விபர்யயமறக் கற்றவர்கள். நம்பிள்ளை ஸகல சாஸ்த்ரங்களையும் வரியடைவே அதிகரித்து அர்த்தப் பாண்டித்யம் முழுவதையும் அருளிச் செயற் பொருளுபந்யாஸங்களிலே உபயோகப் படுத்தி வந்தாரென்பது ப்ரஸித்தம். அவ்வண்ணமாகவே இவ்வாசிரியரும் ஸகல சாஸ்த்ரஜ்ஞராகித் தமது ஞான விளக்கத்தை வியாக்கியானங்களருளிச் செய்வதில் வெகு அழகாகச் செலுத்தி இவ்வுலகுக்கு மஹோபகாரகர்களில் தலைமை ஸ்தானம் பெற்றருளினார்.

மதாந்தரஸ்தர்களில் பட்டபாஸ்கரரும் வித்யாரண்யரும் வேத பாஷ்யங்களை விபுலமாகவெழுதிப் புகழ்பெற்றவர்களே. ஆனாலும் அந்த பாஷ்யங்களானவை பெரிய வாச்சான் பிள்ளை வியாக்கியானங்களின் முன்னிலையில் பகல் விளக்கும் மின்மினியுமாயிருக்கும். அந்த வேத பாஷ்யங்கள் சுமை சுமையாக இருந்தாலும் இன்னது சொல்லிற்றென்று ஒருவர்க்கு மறியப் போகாது. மூலத்தில் ரஸமிருந்தாலன்றோ பாஷ்யத்தில் ரஸங்காண முடியும். காடு பரந்த கர்ம காண்டங்கள் கர்ம நிஷ்டர்களுக்கும் உபயோகமற்றவையாயுள்ளன. பகவத்குண ப்ரசம்ஸை யென்பது ஓரிடத்திலும் அணுமாத்திரமும் காணமுடியாதது. பகவத்குண ரஸிகர்களுக்கு அவை கொண்டு பயனொன்றுமில்லையே அப்படியன்றிக்கே த்ராவிட வேத பாஷ்யகாரரான பெரிய வாச்சான் பிள்ளையின் ஸ்ரீஸூக்தி ஒவ்வொன்றும் பகவத் குணாநுபவத்தாலல்லது போது போக்கவறியாத முமுக்ஷுக்களுக்கு ரஸாயநமாயிருக்கும். பகவத் விஷயத்தில் சேராமல் பாஹ்ய விஷயங்களைப் பற்றிப் பேசினாலுங்கூட பெரிய வாச்சான் பிள்ளையின் வியாக்கியானம் மிகமிக அதிசயிக்கத் தக்கதாயிருக்கும். ஒன்றை இங்கெடுத்துக் காட்டுவோம்.

பெரிய திருமொழியில் திருநறையூர் விஷயமான பாசுரங்களுள் (6—7—4) *மென் மலர் மேல் களியா வண்டு கள்ளுண்ணக் காமர் தென்றல் அலர் தூற்ற, நளிர் வாய் முல்லை முறுவலிக்கும் நறையூர்* என்பது ஒரு பாசுரம். இது சாதாரணமாகச் சோலைகளில் நடக்குஞ் செய்தியைச் சொல்லுவது. வண்டுகள் மது பானம் பண்ணுவதும் தென்றற்காற்று தூற்றுவதும் முல்லை வாய்திறப்பதுமான ஸம்பவம் சொல்லியிருக்கிறவிது ஸ்வபாவோக்தி. ஆனாலும் இங்குச் சொற் சேர்க்கையமைந்த அழகை நோக்கிப் பெரிய வாச்சான் பிள்ளை தமது வ்யாக்கியானத்தில் அருளிச் செய்திருப்பதாவது "[மென் மலர் மேலித்யாதி.] கண்ட விடமெங்கும் பரப்புமாறப் பூத்துக் கிடக்குமிறே; அதிலே மதுபானார்த்தமாகக் கிட்டின வண்டுகள் அத்தைக் கிட்டப் பெற்ற ஹர்ஷத்தாலே களித்து ஸிஷித்த ஸேவை பண்ணுவாரைப் போலே. மதுபானத்தைப் பண்ணிற்

றின. அத்தைக் கண்ட தென்றல் காட்டிலே பழியைத் தூற்றிற்று. அத்தைக் கண்ட முல்லை, புகுந்த ப்ரமாதத்தை யநுஸந்தித்து 'அதுதான் அப்படி செய்கிறது, இதுதான் இப்படி செய்யக்கடவதோ' வென்று வாய்விட்டுச் சிரிக்க மாட்டாமை ஸ்மிதம் பண்ணிற்று'' என்று—இதனை நாமே விவரிப்போம். வண்டு கள்ளுண்ணாதாகவும் தென்றல் அலர் தூற்றினதாகவும் முல்லை முறுவலித்ததாகவும் மூலத்திலுள்ளது. 'அலர் தூற்றுதல்' என்னுஞ் சொல்லுக்குப் புஷ்பங்களைத் தூற்றுதலென்கிற பொருளேயல்லாமல் பழி தூற்றுதலென்கிற பொருளுமுண்டாதலால் அதைக் கொண்டு ச்லேஷோக்தியாக இங்கு வியாக்கியானம் செய்தருளுகிறபடி. வண்டு என்று ஒரு ஸ்ரீவைஷ்ணவனைச் சொன்னபடியாய், அவன் ஏதோ விதிவசத்தால் கள்ளுண்ண நேர்ந்துவிட்டதாம்; அதைக் கண்டவொருவன், கள்ளுண்டான் கள்ளுண்டானென்று காட்டிலே பழி தூற்றப் புறப்பட்டானும்; இவ்விரண்டையுங் கண்டவொரு சுத்த ஸாத்விகன் 'ஏதோ விதி வசத்தால் ஒருவன் ஒருகால் மதுபானம் பண்ண நேர்ந்துவிட்டால் அதைப்பற்றி இப்படியும் ஒருவன் பழி தூற்ற வேணுமோ? இவ்விருள் தருமாஞாலத்தில் இது ஸஹஜந்தானே யென்று வாளாவிருக்கலாகாதோ வென்று வாய்விட்டுச் சிரிக்கமாட்டாமல் இவையென்ன வுலகியற்கை!' என்று புன் சிரிப்புச் செய்கிறானும். எப்படிப்பட்ட அதிகாரிக்கும் ஒரு நிஷித்த காரியஞ் செய்ய நேர்ந்து விடுவது ஸஹஜமென்றும், அதைப்பற்றி யொருவன் பழி தூற்ற நேருவதும் ஸஹஜமென்றும், 'இதுவொரு ப்ரமாதமா? இதைப் பழி தூற்றவேணுமா?' என்று சில மஹான்கள் நினைப்பதுமுண்டென்றும் லௌகிக ஸந்நிவேச முணர்த்தியதாக வியாக்கியானங் கண்டது விலக்ஷண மேதா விலாஸம். இஃது ஓர் எடுத்துக் காட்டாக ஈண்டமைக்கப்பட்டது. அத்யாத்ம சாஸ்த்ரார்த்தங்கள் அபரிமிதமாகக் காணப்படுவதோடு இத்தகைய லௌகிக வாக் விந்யாஸங்களும் விபுலமாகக் காணப்படும் பெரிய வாச்சான் பிள்ளை வியாக்கியானங்களில்.

திவ்யப்பிரபந்தங்களுக்கு வியாக்கியானமிட்டருளுந் திருப்பணியில் மற்றுஞ் சில ஆசாரியர்களும்

வைத்ததுண்டு. ஆனால் பூர்த்தியாக நாலாயிரத்திற்கும் வியாக்கியானமிட்டருளினவரென்னும் பெருமை இவ்வாசிரிய ரொருவர்க்கே அஸாதாரணமாக அமைந்ததாகும். இவ்விஷயம் உபதேச ரத்தின மாலையில் "பிள்ளான் நஞ்சீயர் பெரிய வாச்சான்பிள்ளை, தெள்ளார் வடக்குத் திருவீதிப்பிள்ளை, மணவாள யோகி திருவாய்மொழியைக் காத்த, குணவாளரென்று நெஞ்சே கூறு". "நஞ்சீயர் செய்த வியாக்கியைகள் நாலிரண்டுக்கு, எஞ்சாமை யாவைக்கு மில்லையே, தஞ்சீரால் வைய குருவின் தம்பி மன்னுமணவாள முனி, செய்யுமவை தாமுஞ்சில". "பெரிய வாச்சான் பிள்ளை பின்புள்ளவைக்குந்தெரிய, வியாக்கியைகள் செய்வால், அரிய அருளிச் செயல் பொருளை ஆரியர்கட் கிப்போது, அருளிச் செயலாய்த்தறிந்து" என்ற பாசுரங்களினாலுமுணரத்தக்கது. பெரியாழ்வார் திருமொழியில் நானூறு பாசுரங்களுக்கு மாத்திரம் இவ்வாசிரியர் தம் வியாக்கியானம் லுப்தமாயிருந்ததென்றும், மணவாள மாமுனிகள் பலருடைய பிரார்த்தனைக்கிணங்கி அக்குறையைத் தாம் நீக்கியருளினரென்றும் ஸம்ப்ரதாயம் வல்ல பெரியோர் பகர்வர்.

கடல் ரத்நாகரமென்று பெயர் பெற்றிருத்தல் போல இவ்வாசிரியரது வியாக்கியானக் கடல் எண்ணிறந்த விசேஷார்த்த ரத்ன நிதியாகப் புகழ் பெற்றுள்ளதாதலால் அதனை யநுபவிப்பதே இவ்வாசார்யருடைய பெருமை யநுபவமாகும்.

அர்த்தாத் இங்கொரு முக்கியமான விஷயம் விளக்க வேண்டியதாகிறது. நமது ஸம்ப்ரதாய க்ரந்தங்களில் பெரிய வாச்சான் பிள்ளை யென்றும் ஆச்சான் பிள்ளை யென்றும் வ்யபதேச பேதம் காண்பதுண்டு. பெரிய வாச்சான் பிள்ளையின் ஸமகாலத்தவர்கள் சிலர் இவரை ஆச்சான் பிள்ளை யென்றும் வழங்கி யிருந்தாலும் பிற்பட்டவர்களான மணவாள மாமுனிகள் போல்வார் இவரை ஆச்சான் பிள்ளை யென்ற சொல்லால் ஓரிடத்திலும் வழங்கினதில்லை. மணவாள மாமுனிகள் தமது ரஹஸ்ய வ்யாக்யானாதிகளில் ஆச்சான் பிள்ளையின் ஸ்ரீஸூக்தியாகப் பல விடங்களிலும் எடுத்துக் காட்டியுள்ளவை பெரிய வாச்சான் பிள்ளை யுடையனவே யென்று நாமும்

மயங்கியிருந்து பன்னிரு திங்களனுபவம் முதலான சில நூல்களிலே ஆச்சான் பிள்ளை யருளிச் செயலான பரந்த ரஹஸ்யாதிகளையும் பெரிய வாச்சான் பிள்ளை யருளிச் செயலாக வெழுதி யிருந்தோம். பிறகு நிகழ்ந்த விபுலமான ஆராய்ச்சிகளினால் தேறின தெளிவுகளை ஆச்சான் பிள்ளை யஷ்டாதியாயி முதலான விமர்ச க்ரந்த முகேன உலகுக்கு விளக்கியிருக்கிறோம். அவற்றில் நிரூபித்த பலபல ஹேதுக்களில் இரண்டு மூன்றை மாத்திரம் இங்கெடுத்துக் காட்டி நிற்போம். பரந்த ரஹஸ்யம் முதலிய ரஹஸ்ய க்ரந்தங்களையும் பெரிய வாச்சான் பிள்ளையே விரிவாக அருளிச் செய்திருந்தால், உபதேச ரத்தின மாலையில் திவ்யப் பிரபந்த வியாக்கியான விஷயத்தில் பெரிய வாச்சான் பிள்ளைக்கு மஹத்தான கௌரவத்தைக் காட்டிவிட்டு ரஹஸ்யார்த்த ப்ரகாசன விஷயத்தில் பிள்ளை லோகாசாரியர்க்கு மஹத்தான பெருமையை விளக்கியிருப்பது விரஸமாகும். ரஹஸ்யார்த்தங்களையும் பெரியவாச்சான் பிள்ளையே ப்ரபஞ்சனம் செய்தருளினரென்று ஒரு பாசுரமாவது அவசியம் அருளிச் செய்திருக்க வேண்டும். மாமுனிகள் இதை உபேக்ஷிக்க ப்ரஸக்தியே கிடையாது. ரஹஸ்யார்த்தத்திற்காகப் பெரிய வாச்சான் பிள்ளையைப்பற்றி ஒரு பாசுரங்கூட அருளாமையாலும் அது பற்றிப் பிள்ளை லோகாசாரியர்க்கே ஏழு பாசுரங்கள் அருளிச் செய்திருக்கையாலும் அவ்வுலகாசிரியர்க்குப் பிற்பட்டவரே பரந்த ரஹஸ்யாதி க்ரந்த கர்த்தாவென்பது தெளிவாகும். நம்பிள்ளை திருவடிகளில் நேராகக் கேட்டவரும் பல விதங்களிற் பெருமை பெற்றவருமான பெரிய வாச்சான் பிள்ளையே பரந்த ரஹஸ்யாதிகளை யருளிச் செய்திருந்தால் அவருடைய கிரந்தங்களை விட்டுப் பிள்ளை லோகாசாரியாருடைய முமுக்ஷுப்படி முதலான க்ரந்தங்களையே எங்கும் யாவரும் காலக்ஷேப க்ரந்தமாகக் கொள்ள ப்ரஸக்தியே யிராது. ஆச்சான் பிள்ளை ஸந்ததியாரென்று சொல்லிக் கொள்பவர்களுங்கூட இற்றைக்கும் நாளைக்கும் பரந்த ரஹஸ்யாதிகளின் பெயரையும் கேட்டறியாதவர்களாக வன்றோ உண்மையுள்ளது. அன்றியும், பரந்த ரஹஸ்யத்தில் வேதாந்த தேசிகருடைய சில வாதங்களுக்கு மறுப்பு உரைக்கப்பட்டு மிருக்கிறது. பெரிய வாச்சான் பிள்ளை ஸ்ரீஸூக்திகளை மேற்கோள் காட்டும் வேதாந்த

தேசிகன் பெரிய வாச்சான் பிள்ளைக்குப் பிற்பட்டவ ரென்பது நிர்விவாதம். அவருடைய உக்திகளுக்கு விடை கூறுகின்ற பரந்த ரஹஸ்யகாரர் பெரிய வாச்சான் பிள்ளையாயிருக்கத் தகுதியில்லை. ஆகவே, வேளுராசிரியருடைய க்ரந்தங்களைப் பெரியவாச்சான் பிள்ளையின் க்ரந்தங்களாகக் கொள்வது அநுசித மென்று பெரியார்களின் துணிபு.

பெரிய வாச்சான் பிள்ளையின் கம்பீரமான ஸ்ரீ ஸூக்திகள் அமுதிலுமாற்ற வினியவை. இவ்வா சிரியர் அவதரியாதிருந்தால் ஸ்ரீ வைஷ்ணவ வுலகுக்குப் பேரின்பவனுபவம் மிகவும் குன்றியேயிருக்கும். இவரது திருவடிகளே நமக்குத் தஞ்சம்.

பிள்ளை லோகாசார்யர் வைபவம்.

வடக்குத் திருவீதிப்பிள்ளைக்குத திருக்குமாரர்கள் இருவர். மூத்தவர் பிள்ளை லோகாசார்யர்; இளையவர் அழகியமணவாளப் பெருமாள் நாயனார். இவ்விருவரும் நைஷ்டிகப்ரஹ்மசாரிகள். ஐப்பசியில் திருவோணத் தன்று அவதரித்த பரமகாருணிகரான பிள்ளைலோகா சார்யருடைய பெருமையைச் சிறிது பேசி மகிழ்வோம். இவருடைய ஜ்ஞாநாநுஷ்டானப் பெருமைகள் ஒரு புறமிருக்க, பரமகருணையின் திறத்தை என்னென்று பகர்வது?

ஆசாரியர்கள் பொதுவாக இருவகைப்படுவர்கள். அநுவ்ருத்தி ப்ரஸங்காசார்யரென்றும் க்ருபாமாத்ரப்ர ஸங்காசார்யரென்றும். சிஷ்யர்கள் பலகால் துவண்டு வேண்ட அதனாலே அநுக்ரஹிப்பவர்கள் அநுவ்ருத் திப்ரஸங்காசார்யர்களாவார்கள். சிஷ்ய ப்ரார்த்தனை யைச் சிறிதும் எதிர்பாராமல் தம்முடைய இயற்கை யின்னருளால் தாமாகக் கனிந்து" பயனன்றாகிலும் பாங்கல்லராகிலும் செயல் நன்றாகத் திருத்திப்பணி கொள்வதையே விரதமாகக் கொண்டு தம் பேறாக அநுக்ரஹித்தருள்பவர்கள் க்ருபாமாத்ரப்ரஸங்காசார் யர்கள். நமது ஆசார்ய கோஷ்டியில் எம்பெருமானார் தாம் க்ருபாமாத்ரப்ரஸங்காசார்யரென்ற பட்டத்தை முதன்மையாகப் பெற்றனர். ஆயினும் அவர் ஸம்ப்ர தாய ரஹஸ்யார்த்த விவரணமாக ஒரு க்ரந்தமும்

அருளிச்செய்திலர். ப்ரஹ்மஸூத்ரங்களின் அர்த்தங்களை விவரிக்க மூன்று நூல்களையருளிச் செய்தவர் ரஹஸ்யார்த்த விவரணமாக ஒரு சிறு நூலாவது அருளிச்செய்திருக்கலாம். இன்னுமொரு திருக்கோலம் பூண்டு [அதாவது, மணவாள மாமுனிகளாக அவதரித்து] அப்போது அருளிச் செய்யவேணுமென்று திருவுள்ளம் பற்றியிருந்தமையாலே, ஸ்ரீராமாநுஜரான அந்த அவதாரந்தன்னிலே ரஹஸ்யார்த்தங்களை ஏடுபடுத்தாமே சென்றனர். ஸ்ரீபாஷ்யம் கீதாபாஷ்யம் முதலிய திவ்யக்ரந்தங்களில் ஸம்ப்ரதாய ரஹஸ்யார்த்தங்களும் ஆங்காங்குச் சேமிக்கப் பட்டேயிருந்தாலும் அவற்றைக் கையிலங்கு நெல்லிக்கனியாகக் காட்டித்தாராத குறை குறையே. அக்குறைதீரவே ஸர்வஜ்ஞ ஸார்வபௌமரான பிள்ளை லோகாசாரியர் திருவவதரித்து, இவர் தாமே முதன் முதலாக ஸ்ரீவைஷ்ணவ மண்டலிக்கு மஹோபகாரஞ் செய்தருளினார்.

லோகாசார்ய ரென்கிற திருநாமம் முதலில் நம்பிள்ளைக்கு வழங்கிவந்தது. ஸ்வாசார்யர் திருநாமத்தையே புதல்வர்க்கு இடவேணுமென்று விருப்பங்கொண்ட இவரது திருத்தந்தையார் நம்பிள்ளையின் திருநாமத்தையே இவர்க்குச் சாத்தினர். வாசி தெரிவதற்காகப் பிள்ளை லோகாசார்யரென்று வழங்குதல் நிகழ்ந்தது. உபதேச ரத்தினமாலையில் —*பின்னை வடக்குத் திருவீதிப்பிள்ளை, அன்பாலன்ன திருநாமத்தை யாதரித்து, மன்னுபுகழ் மைந்தருக்குச் சாத்துகையால் வந்துபரந்ததெங்கும், இந்தத் திருநாம மிங்கு* என்றுள்ள பாசுரத்தினால் இஃதறியத்தக்கது. உண்மையில் லோகாசார்ய ரென்னுந் திருநாமம் இவர்க்கேதகும்.

இவ்விருள் தருமாஞாலத்தின் அகவிருளை அறவேயொழிக்கவல்ல திவ்ய ஸ்ரீஸூக்திகளைத் தேனும் பாலும் நெய்யும் கன்னலுமாக அளித்தருளினவர் இம்மஹாசார்யர். இவருடைய ஸர்வஜ்ஞத்வமும் பரமகாருணிகத்வமும் பரமப்ராமாணிகத்வமும் ஒவ்வொன்றும் நெஞ்சால் நினைப்பரிதே. ஒரு அர்த்தத்திலும் ஆக்ரஹமின்றிக்கே ஆசார்யபரம்பராப்தமான அர்த்தங்களையே அற்புதமாக அமைத்திருக்குமழகு இவருடைய

திவ்யக்ரந்தங்களுக்கே அஸாதாரணச் செல்வமா யிருக்கும்.

இவரருளிச் செய்த நூல்கள் அஷ்டாதசரஹஸ்ய மென்று ஸுப்ரஸித்தமாயிருக்கும் அவற்றுள் ஸ்ரீவசந பூஷணம் தத்வத்ரயம் முமுக்ஷுப்படி என்னும் மூன்று க்ரந்தங்கள் ஸூத்ரஸரணியில் திருவவதரித்தவை. இவற்றினுள்ளும் ஸ்ரீவசன பூஷணத்தின் பெருமை அப்ரமேய மென்று மணவாளமாமுனிகள் உபதேச ரத்தின மாலையில் ஏழு பாசுரங்களினால் மிக மிகக் கொண்டாடியருளுகிறார். *ஸர்வஜ்ஞ லோககுரு நிர்மிதமார்யபோக்யம் வந்தே ஸதா வசநபூஷண திவ்யசாஸ்த்ரம்* என்று இந்த திவ்யக்ரந்தத்தை ஒரு திவ்யசாஸ்திரமென்றே வழங்குவர் பெரியார். இதற்கு மணவாளமாமுனிகளருளிச் செய்த வியாக்கியானத் தின் அவதாரிகையிலுள்ள சில ஸ்ரீஸூக்திகளை இங் கெடுத்துக்காட்ட வேண்டியது அவச்யமாகிறது.—"ஸம்ஸாரி சேதநரிழவு ஸஹிக்கமாட்டாத பரமக்ருபை யாலே தது்ஜ்ஜீவநார்த்தமாகத்தாமும் பலப்ரபந்தங்க ளருளிச்செய்த பிள்ளை லோகாசார்யர், ஆசார்ய பரம் பராப்ராப்தங்களான அர்த்தங்களில், அவர்கள் தாங் கள் கௌரவாதிசயத்தாலே ரஹஸ்யமாக உபதேசித் துப் போந்தவையாய், அருமைபெருமைகளைப்பற்ற இதுக்கு முன்பு தாமும் ப்ரகாசிப்பியாமல் அடக்கிக் கொண்டு போந்தவையான அர்த்த விசேஷங்களெல்லா வற்றையும் பின்புள்ளாருமிழக்க வொண்ணாதென்கிற தம்முடைய க்ருபாதிசயத்துக்கு மேலே பெருமானும் ஸ்வப்நத்திலே திருவுள்ளமாயருளுகையாலே ஸ்ரீவசந பூஷணமாகிய இப்ப்ரபந்த முகேந வெளியிட்டருளு கிறார். முன்பே பேரருளாளப் பெருமாள் தம்முடைய நிர்ஹேதுகக்ருபையாலே மணல் பாக்கத்திலேயிருப்பா ரொரு நம்பியாரை விசேஷகடாக்ஷம் பண்ணியருளி தஞ்சமாயிருப்பன சில அர்த்த விசேஷங்களைத் தாமே அவர்க்கு ஸ்வப்நமுகேந அருளிச்செய்து 'நீர் போய் இரண்டாற்றுக்கு நடுவே வர்த்தியும்; இன்னமுமக்கு இவ்வர்த்தங்களை யெல்லாம் விசதமாக நாம் அங்கே சொல்லுகிறோம்' என்று திருவுள்ளமாயருளுகையாலே அவரிங்கே வந்து (பெரிய) பெருமாளை ஸேவித்துக் கொண்டு, தமக்கு முன்பு அங்கருளிச் செய்த அர்த்தங்

களையும் அசலறியாதபடி அநுஸந்தித்துக்கொண்டு ஏகாந்தமானதொரு கோயிலிலே வர்த்தியா நிற்கச் செய்தே, தம்முடைய ஸ்ரீபாதத்துக்கு அந்தரங்கரான முதலிகளும் தாமுமாக பிள்ளை ஒருநாள் அந்தக் கோயிலிலே யாத்ருச்சிகமாக வெழுந்தருளி, அவ்விடம் ஏகாந்தமாயிருக்கையாலே ரஹஸ்யார்த்தங்களை அவர்களுக்கருளிச் செய்து கொண்டு 'எழுந்தருளியிரா நிற்க, அவை தமக்குப் பேரருளாளப் பெருமாளருளிச் செய்த அர்த்த விசேஷங்களாயிருக்கையாலே அவர் போர விஸ்மிதராய் உள்ளில் நின்றும் புறப்பட்டு வந்து பிள்ளை ஸ்ரீபாதத்திலே விழுந்து 'அவரோ நீர்?' என்ன, 'ஆவதேது?' என்று பிள்ளை கேட்டருள, பேரருளாளப் பெருமாள் தமக்கு அவ்வர்த்தங்களை ப்ரஸாதித்தருளின படியையும் இத்தேசத்திலே போக விட்டருளின படியையும் இன்னும் உமக்கங்கே விசதமாகச் சொல்லுகிறோ மென்றருளிச் செய்தபடியையும் விண்ணப்பஞ் செய்ய, கேட்டு மிகவும் ஹ்ருஷ்டராய் அவரையும் அபிமானித்தருள, அவரும் அங்குத்தைக்கு அந்தரங்கராய் வர்த்திக்கிற நாளிலே, பெருமாள் அவர்க்கு ஸ்வப்நத்திலே 'இவ்வர்த்தங்கள் மறைந்து போகாதபடி இவற்றை யொருப்ரபந்தஸ்தமாக்கச் சொன்னோமென்று நீர் பிள்ளைக்குச் சொல்லும்' என்று திருவுள்ளமாக, அவர் 'இப்படி பெருமாள் திருவுள்ளமாயருளினார்' என்று விண்ணப்பஞ் செய்ய, 'ஆனால் அப்படி செய்வோம்' என்று திருவுள்ளம் பற்றி அனந்தரம் இப்ப்ரபந்த மிட்டருளினா ரென்று ப்ரஸித்தமிறே." என்பவை வியாக்கியான ஸூக்திகள்.

மணவாள மாமுனிகள் ஆழ்வார் திருநகரியிலிருந்து திருவரங்கம் பெரிய கோயிலுக் கெழுந்தருளின போது அங்கே பிள்ளை லோகாசார்ய ரெழுந்தருளியிருந்த விடத்திற்கு நித்திய மெழுந்தருளி "ரஹஸ்யம் விளைந்த மண்" என்று அவ்விடத்தே போர ப்ரதிபத்தி பண்ணி உகந்திருப்பார் என்று ப்ரஸித்தம்.

பிள்ளை லோகாசார்யர் வைபவம் முற்றிற்று.

ஸ்ரீமத் வேதாந்த தேசிகன் வைபவச் சுருக்கம்.

பரம பவித்திரமான ஸ்ரீமத் வேதாந்த தேசிக சரித்திரத்தைப் பலர் பலவாறு எழுதி வெளியிட்டுள்ளார்கள். ஆசார்ய சம்புவென்கிற வடமொழி நூல் ஒன்றே பிராமாணிகமானது. அதற்கு வேதாந்தாசார்ய விஜயமென்னும் திருநாமம் ப்ரஸித்தமானது. இந்த நூல் ப்ரக்ஷேபாதி சங்கைகளுக்கு இடமல்லாதது. தேசிகரோடு விகல்பிக்கலாம்படியான வாக் வைபவத்தையுடைய மஹாவித்வத் கவிவரேண்யர் இயற்றிய இந்த சம்பூக்ரந்தமொன்றுதான் தேசிக வைபவத்தை உள்ளபடியுணர்த்தும் நூலாகும். அதில் இதராசார்ய தூஷணமென்பது அடியோடு இடம் பெறுதலோடு தேசிகனுக்கு ப்ராமாணிகமாக எவ்வளவு சரித்திரமுள்ளதோ அவ்வளவே அதில் நிபந்திக்கப்பட்டுள்ளது. அதில் காவ்ய ஸரணிக்கேற்ப வர்ணனைகளாகவும் உத்ப்ரேக்ஷைகளாகவுமுள்ள பாகங்களைத் தள்ளி சரித்ரபாகமாகவுள்ளதை மாத்திரம் தொகுத்தால் இங்கே நாம் காட்டுகிற அளவுதான் உண்மையான தேசிக சரித்திரம் தேறுகிறது. அதை அங்கூர அநதிரிக்தமாகக் காட்டுகிறோம் காண்மின்;

அந்த சம்பூக்ரந்தத்தில் ஆறு ஸ்தபகங்கள் உள்ளன. முதல் ஸ்தபகத்தில் – விபுலமான மங்களாசரணம், வேதாந்தஸூரி சரித்ரம் சொல்லுகிறேனென்ற ப்ரதிஜ்ஞை, க்ரந்த கர்த்தாவான தம்முடைய வம்சாவளிப்ரசம்ஸை, தேசிகனுடைய அவதாரஸ்தலமான காஞ்சீபுரியின் வர்ணனை, தேசிகனுடைய பிதாமஹரான புண்டரீகாக்ஷயஜ்வாவின் வர்ணனை - ஆக இவ்வளவு உள்ளது.

இரண்டாவது ஸ்தபகத்தில் - அந்த 'புண்டரீகாக்ஷயஜ்வாவின் திருக்குமாரரும் தேசிகனுடைய திருத்தகப்பனருமான அநந்த ஸூரியின ப்ரசம்ஸை, அவருடைய தேவியார் கர்ப்பவதியானது, திருமலைமால் திருமணி அந்த கர்ப்பத்திலே வந்து ஆவேசித்தது - ஆக இவ்வளவு சொல்லப்பட்டது. (இனிமேல்தான் திருவவதாரம் தொடங்கி சரித்திரம் கூறுதல்.)

மூன்றாவது ஸ்தபகத்தில் —1. தேசிகனுடைய திருவவதாரம், 2. பால்ய வர்ணனம், 3. நடாதூரம்மாள் பக்கலிலே ஸ்ரீபாஷ்ய காலக்ஷேபம் செய்துவரும் தம்முடைய மாதுலரான கிடாம்பியப்புள்ளாரோடுகூட தேசிகனும் அம்மாள் திருமாளிகைக்குச் சென்று

அங்கு அம்மாளுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றது, 4. காலத்தில் உபநயநாதிகள் நடந்து வேதாத்யயநமும் ஸாமாந்ய சாஸ்த்ராத்யயநமும் வெகு விரைவில் செய்தது, 5. விவாஹம் செய்துகொண்டது, 6. ஹயக்ரீவ மந்த்ரத்தை ஜபித்தது, 7. வாதிகளை வென்றது, 8. ந்யாய ஸித்தாஞ்ஜநம் முதலிய சில க்ரந்தங்கள் ஸாதித்தது. 9. கவிதார்க்கிக கேஸரியென்கிற விருது பெற்றது, - ஆக இவ்வளவு சொல்லப்பட்டது.

நான்காவது ஸ்தபகத்தில் 10, தேவப் பெருமாளுடைய வைசாகோத்ஸவ ப்ரசம்ஸை. 11. அவ்வுத்ஸவத்தில் கருடோத்ஸவ தினத்தில் பஹுமானிக்கப் பெற்ற தேசிகன் வரதராஜ பஞ்சாசத்ஸ்தோத்ரமருளிச் செய்தது. 12. வைசாகோத்ஸவஸேவார்த்தமாக வந்திருந்த வித்யாரண்யயதி தேசிகனுடைய கவிதார்க்கிக ஸிம்ஹபிருதத்தைப் பொறுமல் இவரை வாதத்திற் கிழுக்க, ப்ரசண்டவாதம் நடத்தி அந்தயதியை பங்கப் படுத்தினது. 13. பிறகு புரட்டாசி மாஸம் அணித்தானவாறே திருவேங்கடமுடையானுத்ஸவம் ஸேவிக்கக் குதூஹலங் கொண்டது ஆக இவை சொல்லிற்று.

ஐந்தாவது ஸ்தபகத்தில—14. தேசிகனுடைய திருவேங்கடயாத்திரை. 15. திருமலையில் தயாசதகமருளிச் செய்தது. 16. முன்பு காஞ்சீபுரியில் பராஜிதராய்ப்போன வித்யாரண்யர் விஜயநகரத்தரசனிடம் சேர்ந்திருந்து, அந்த ராஜாவுக்கு இவருடைய அப்ரமேயமான வைபவத்தை யெடுத்துரைத்து இவரை அங்கே வரவழைத்து விசேஷ ஸன்மானமளிக்க ராஜாவின் அநுமதியையும் பெற்று அப்போது திருவேங்கட மலையிலே வாழ்கின்றவிவர்க்குச் செய்தியனுப்ப, இவர் வைராக்ய பஞ்சகத்தை யெழுதியனுப்பித் தம்முடைய அப்ரதிமமான வைராக்யத்தைக் காட்டி நின்றது. 17. பிறகு வடதிசை நோக்கிச் சென்று கங்காநதீ தீர்த்த யாத்திரை செய்தருளி மீண்டு காஞ்சீபுரி வந்து சேர்ந்து சிலநாள் அவ்விடத்திலேயே வாழ்ந்த செய்தி. 18. விஜய நகரத்தரசனுடைய ஆஸ்தானத்தில் வித்யாரண்யர்க்கும் அக்ஷோப்ய முனிக்கும், த்வைதாத்வைத விவாத கோலாஹலம் நடக்க, அவ்விருவருடைய வாதங்களில் எவருடைய வாதம் ஸமீசீநமானதென்று முடிவு தெரிந்துகொள்ள விரும்பிய அரசன் இருவருடைய வாதங்களையும் எழுதச் செய்து வாங்கி ஆள்

மூலமாக தேசிகனுக்கனுப்பி மத்தியஸ்தாபிப்ராயம் தெரிவிக்கவேணுமென்று வேண்ட, தேசிகன் "அஸிநா தத்த்வமஸிநா பரஜீவப்ரபேதிநா, வித்யாரண்ய மஹாரண்ய மக்ஷோப்ய முநிரச்சிநத்." என்றொரு ச்லோகமியற்றி யனுப்ப, அதை ராஜா பெற்று மிகவுகந்து அக்ஷோப்ய முநியை ச்லாகித்தானென்பது. 19. பிறகு ஸ்ரீரங்கநாதனை ஸேவிக்க விரும்பிய தேசிகன் ஸ்ரீ காஞ்சியில் நின்றும் புறப்பட்டு வழியடைவில் திருவஹீந்திரபுரம் சென்று சேர்ந்து அங்கு நெடுங்காலம் வஸிக்கவேணுமென விரும்பி ஔஷதாத்ரியில் ஹயக்ரீவ மந்த்ராவ்ருத்தி பூர்வகமாக ஹயக்ரீவோபாஸநை செய்து வருகையில் ஒருநாள் ஜபஸமயத்தில் ஸாக்ஷாத்கரிக்கப்பட்ட பகவானுடைய நியமனத்தினால் ஹயக்ரீவஸ்தோத்ரம், தேவநாயக பஞ்சாசத், கோபால விம்சதி, மஹாவீர கத்யம், அச்யுதசதகம், பரமத பங்கம், விரோத பரிஹாரம் முதலான க்ரந்தங்களையியற்றினது. 20. பிறகு ஸ்ரீமுஷ்ணத்திற்கெழுந்தருளி அங்கு நின்றும் ஸ்ரீரங்காபிமுகமாக எழுந்தருளுகையில் ஸ்ரீரங்கத்தில் நின்றும் வந்து கொண்டிருந்த சில ஸ்ரீவைஷ்ணவர்கள் அங்கு துர்வாதிவிஜயார்த்தமான ஆஹ்வாந பத்ரிகையை ஸமர்ப்பிக்க, விரைந்து சென்று கோயில் சேர்ந்தாரென்பது சொல்லிற்று.

ஆறுவது ஸ்தபகத்தில்—21. ஸ்வாமி ஸ்ரீரங்கநாதனை ஸேவித்து பகவத் த்யாக ஸோபாநம் முதலான ஸ்துதிகளருளிச் செய்தது, 2. அங்குள்ள பாகவதர்களின் வேண்டுகோளுக்கிணங்கி க்ருஷ்ணமிச்ர னென்கிற துர்வாதியோடு பதினெட்டுநாள் வாதயுத்தம் செய்து வெற்றிபெற்றது, 23. வேதாந்தாசார்யரென்றும் ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரரென்றும் விருதுகள் பெற்றது, 24. சததூஷணீ அதிகரண ஸாராவளி தத்வமுக்தாகலாபம் ஸர்வார்த்த ஸித்தி ஸேச்வரமீமாம்ஸை ஸங்கல்ப ஸூர்யோதயம் யாதவாப்யுதயம் தாத்பர்யசந்திரிகை மீமாம்ஸாபாதுகை தத்வடீகை ஸ்ரீஸ்துதி பூஸ்துதி யதிராஜஸப்ததி முதலான பலபல நூல்களையியற்றினது, 25. கவித்வச் செருக்குடன் வந்தவொரு துர்வாதியின் அவலேபத்தை யகற்ற பாதுகா ஸஹஸ்ரமருளிச் செய்தது, 26. ஸமஸ்யா ஸஹஸ்ர பூரணம் செய்தது. 27. அப்போது அங்கு யவநோபப்லவ முண்டாக, அது தொலைய அபீதிஸ்தவ

மருளிச் செய்தது, 28. அங்கு நின்றும் புறப்பட்டுத் திரு
வனையாத்திரை செய்தது. 29. ஆழ்வார் திருநகரி திரு
நாராயணபுரம் முதலானவை ஸேவித்துக்கொண்டு
காஞ்சீபுரம் வந்து சேர்ந்தது. 30. அங்கு ஸ்வாமி
யினுடைய பிருதாவளிகளைப் பொறுத வொரு மாந்
ரிகன் வந்து பாம்பாட்டப் போராட்டம் செய்ய, கருட
தண்டகமருளிச் செய்து அவன் செருக்கை யடக்
கினது. 31. பிறகு திருக்குமாரர் அவதரித்தது. 32.
ரஹஸ்யத்ரயஸாரமியற்றியது - ஆக இவ்வளவு
சொல்லி க்ரந்தம் தலைக்கட்டப் பட்டது.

மேலே விவரித்தபடி தேசிக சரித்திர ஸம்பந்தமாக முப்பத்திரண்டு விஷயங்களே அந்நூலிலுள்ளன. சில ஸ்ரீவைஷ்ணவர்கள் பாதரக்ஷையைக் கட்டி ஸ்வாமி திருமுடியிலே படும்படி தொங்கவிட்டார்களென்றும், ச்ராத்தத்தில் நிமந்த்ரணத்திற்கு ஒப்புக்கொண்டிருந்தவர்கள் வஞ்சித்துவிட்டார்களென்றும், ஸந்நிதியில் பெருமாளை ஸேவித்துக் கொண்டிருக்கும் போது ஏகாதசியன்று பொங்கலைக் கொணர்ந்து கொடுத்தார்களென்றும், திருமாளிகையிலெழுந்தருளியிருந்து க்ரந்தாவலோகநம் செய்துகொண்டிருக்கையில் திருவடிகளைப் பிடித்திழுத்துத் தெருவிலே விழவிட்டார்களென்றும் இப்படி பலவாறு நவீநர்கள் எழுதியுள்ள சரித்திரங்களானவை பிறர்மீது அவத்ய மேறிடுவதற்காக நிராதாரமாகக் கல்பிக்கப் பட்டவை. இதனால் பிறர்பால் அவத்ய மேறுவது மாத்திரமன்று. ஸ்வாமி தேசிகனுக்கும் மிகுந்த கௌரவ ஹாநி ஏற்படுகிறதென்பதை விவேகிகள் எளிதாக உணர்வர்கள். "ராமோ ராமோ ராம இதி ப்ரஜாநாமபவந் கதா:" என்றும்போலே "வேதாந்த ஸூரிர் நிகமாந்தஸூரிஸ் த்ரய்யந்தஸூரி: கவிதார்க்கிகேந்த்ர:, இத்யேவ ஸர்வத்ர ஸதைவ ஸர்வே ஜநாஸ் ஸமந்தாத் கதயந்த ஆஸந்" என்று ச்லோகமியற்றிக் குலாவவேண்டியிருக்க. அது செய்யாதே ஸபக்ஷர்களும் விபக்ஷர்களுமான எல்லார்க்கும் வெறுக்கத் தக்கவராக இருந்துவந்தா ரென்று ப்ரசாரம் செய்வதனால் ஸ்வாமிக்கு லாகவமன்றோ உண்டாகிறதென்பதைச் சிறிது மறிய கில்லாதே, வைபவ க்ரந்தமென்று பெயரிட்டு லாகவமயமாக எழுதிவைப்பவர்களைப்பற்றி நாம் என்ன சொல்லுவது. ... ...

தேசிக சரித்திரச் சருக்கம் முற்றிற்று.